அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்


Quarterly of
All Ceylon Hindu Congress

# இந்து ஒளி
# HINDU OLI

தீபம் 3 சுடர் 2

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்







மகா சிவராத்திரி சிறப்பிதழ்

# கலாநிதி
# வேலாயுதபிள்ளை
# நினைவு தின நிகழ்வு

அமரர் கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களின் ஓராண்டு நினைவு தின வைபவம் இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், கடந்த நவம்பர் மாதம் 14ம் திகதியன்று கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றின் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி நினைவுப் பேருரை நிகழ்த்துவதையும், அங்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினரையும், நிகழ்வில் கலந்துகொண்ட இரத்மலானை இந்துக் கல்லூரியின் ''கலாநிதி வேலாயுதபிள்ளை விடுதி''யைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேநீர் சிற்றுண்டி விருந்துபசாரம் அளிப்பதையும் இங்கு காணலாம்.









உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் 3 14.02.1999 சுடர் 2
வெகுதானிய வருடம் மாசி - 2ம் நாள்

*சிவனுக்குகந்தது சிவராத்திரி என்ற பொய்யா மொழியில் இருந்து சிவ விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம் என்பது சொல்லாமலே புலப்படுகின்றது.*

*பிரமதேவரும் விஷ்ணுபிரானும் தம்மில் யார் பெரியவர் என்ற வாக்கு வாதத்திலீடுபட்டுப் போர் செய்த சமயம் இருவருக்கும் நடுவே சோதிப் பிழம்பாய்த் தோன்றிய பரம் பொருளான சிவபெருமான் அவர்களுக்குத் தமது திருவுருவத்தைக் காட்டி "நீவிர் இருவரும் யுத்தம் செய்த பொழுது நாம் உம்முன் சோதி வடிவாய் நின்ற இரவு சிவராத்திரியாகும். அச்சிவராத்திரி வரும் தினங்களில் ஆகமங்களில் கூறிய விதிகளுக்கிணங்க எம்மைப் பூசனை செய்பவர்க்கு அவரவர் விரும்பிய எல்லாம் கொடுப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.*

*மேலும் "இவ்விரதத்தின் மகிமையை அளந்து சொல்ல வல்லவர் யாருமில்லை. பஞ்சமா பாதகங்களைப் புரிந்து நெறி தவறி வாழும் சண்டாளர் கூட முறைப்படி இவ்விரதத்தை நோற்றால் அவர்கள் மேலவர்களாகி இவ்வுலகத்தில் தாம் விரும்பிய சகல போகங்களையும் பெற்று இன்புற்று வாழ்ந்து மோட்ச பதத்தை அடைவது திண்ணம்" என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.*

*இதுமட்டுமல்ல, கணக்கில்லாத பசுக்களைத் தானமாகக் கொடுத்தாலும் அசுவமேத யாகம் செய்தாலும் விதிப்படி செய்யப்படுகின்ற சிவராத்திரி விரதத்திற்கு ஒப்பாகா என்றும் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.*

*இவ்வித மகிமை மிக்க சிவராத்திரி விரதத்தை நாமும் கேளிக்கைகள் எதுவுமின்றி, சிவசிந்தனையுடன் முறைப்படி அனுட்டித்து எமது இன்னல்கள் நீங்கி நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்பட்டு மகிழ்ச்சிகரமான வகையில் சகல போகங்களுடன் இன்புற்றினிது வாழ்ந்து இறைவனடியில் பேரின்பப் பெருவாழ்வு பெற்று உய்வோமாக.*

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

திருநாவுக்கரசு நாயனார் அருளியது

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய
மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை
மணாள னுலக்குக் கெல்லாந்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலவன்
திருவடியைக் கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

### திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
வினையனா னென்றுன்னை யறிவித் தென்னை
யாட் கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
யனையநான் பாடேனின் றாடே னந்தோ
வலறிடே னுலறிடே னாவி சோரேன்
முனைவனே முறையோநா னான வாறு
முடிவறியேன் முதலந்த மாயினானே.

### திருவிசைப்பா

கருவூர்த் தேவர் அருளியது

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோழேச்சரத் தானே.

### திருப்பல்லாண்டு

சேந்தனார் அருளியது

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற் றேன் பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுது மே.

### பெரிய புராணம்

சேக்கிழார் சுவாமிகள் அருளியது

அண்ணலே யெனையாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணிநான் தொழநயந் தருள்புரி எனப் பணிந்தார்.

திருச்சிற்றம்பலம்

# பொங்கல் பண்டிகை

ஒவ்வொரு ஆங்கில ஆண்டும் ஜனவரி மாதம் முதல் தொடங்கும். நம்முடைய ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து தொடங்குவதை நாம் அறிவோம். ஆனால் நம்முடைய மதத்தின் அடிப்படையில் மார்கழி மாதம் மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது.

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய ஆறு மாதங்கள் தேவதைகளின் பகற்காலம். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறுமாதகாலம் தேவதைகளுக்கு இரவு காலம். மார்கழி மாதமானது தேவர்களின் விடியற்காலை வேளை.

நம் எல்லோருக்குமே விடியற்காலை வேளையில் எழுந்திருப்பது, புத்தகங்களைப் படிப்பது, நல்லவைகளைச் சிந்திப்பது ஆகியவை நல்லது. விடியற்காலையில் செய்யக்கூடிய பணிகள் எல்லாம் நீண்ட காலம் இருக்கக் கூடியவை. முந்தைய இரவில் பல காரியங்களைச் செய்து, மனம் குழம்பியிருக்கலாம். ஆனால் காலையில் எழுந்திருக்கும்போது மனம் தெளிவாக இருக்கும். எழுந்து சிறிது நேரத்திற்குப் பிறகு குழப்பம் ஏற்படலாம். ஆனால் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் நேரத்தில் மனம் தெளிவாக இருக்கும். ஆகவே, அந்த விடியற்காலை வேளையில் மனம் தெளிவாக இருக்கும்போது நல்லதை நினைத்தால் அது நிலைத்து நிற்கும். பள்ளிப் பாடங்களைப் படித்தால் நிலைத்து நிற்கும்.

விடியற்காலை வேளையில்தான் பட்சிகளெல்லாம் உறங்கிவிட்டுத் தன் பணிகளைச் செய்யக் கூண்டிலிருந்து வெளியே கிளம்புகின்றன. உயிருள்ள அனேக பிராணி வர்க்கங்கள் தம் பணிகளைச் செய்யவும் இரை தேடவும் முயற்சித்து விடியும் பொழுதை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டு உள்ளன. சூரியனும் தன் பணியைச் செய்ய வெளிக்கிளம்புகிறான். ஆகவே விடியற்காலை வேளையில் இருள் அகலுகிறது. பிரகாசம் ஏற்படுகிறது. சோம்பல் அகலுகிறது. சுறுசுறுப்பு ஏற்படுகிறது. செயல்படுவதற்குச் சிந்தனை தூண்டிவிடப்படுகிறது. இத்தனையும் மனித வாழ்கையில் நாம் பலன் அடைவதற்காகத்தான்.

எந்தவொரு கலாசாரத்துக்கும் மூலமானது நமது இந்து கலாச்சாரம். மார்கழி மாதம் புனிதமான மாதமாக, இறைவனுக்குச் சம்பந்தப்பட்ட மாதமாக, இறைவனால் கூறப்பட்டிருக்கிறது. மார்கழி மாதத்திலே கோபியர்கள் கிருஷ்ணனைத் துதித்ததாக வரலாறு கூறுகிறது. இப்போதும் மார்கழி மாதத்தில் எல்லாக் கோயில்களிலும், வீடுகளிலும் சுத்தம் செய்து, கோலமிட்டு, பூஜை பஜனை முதலியன செய்யப்பட்டு வருகின்றன.

உலக வாழ்க்கைக்குத் தேவையான எந்தவொரு பணியையும் இந்த மார்கழி மாதத்தில் தொடங்கமாட்டார்கள். இறைவனுக்காகச் செய்யப்படும் பணிகளை மாத்திரமே மார்கழி மாதத்தில் விசேஷமாகக் கொண்டாடுவார்கள். இந்துக்களின் முக்கியமான வழிபாட்டுத் தெய்வங்கள் சிவபெருமானும் விஷ்ணுவும் ஆவர். இவ்விருவரின் திருவிழாக்கள் இந்த மாதத்தில்தான் வருகின்றன. வைகுண்ட ஏகாதசியன்று பெருமாளுக்கும் திருவாதிரையன்று சிவவடிவமான நடராஜப் பெருமானுக்கும் விழாக்கள் நடைபெறுகின்றன. இந்தப் புனிதமான மாதத்தில்தான் மற்ற மதத்தினரும் வருடப் பிறப்பு விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

ஆகவே, இந்தப் புனிதமான மாதத்திலே புனிதமான மனிதப் பிறவி எடுத்த நாம் அனைவரும் புனித எண்ணங்களும் புனிதச் செயல்களும் நம்மிடையே வளர வேண்டும் என்ற புனிதமான ஆண்டவனைப் புனிதமான மனதுடன் பிரார்த்தனை செய்வோமாக.

இந்த மார்கழி முடிவில்தான் பொங்கல் பண்டிகை வருகிறது. ஒவ்வொரு நாளும் வீட்டில் பால் காய்ச்சும் போது பொங்கும். ஆனால் அது பண்டிகை ஆகாது. ஆனால் பொங்கல் பண்டிகையன்று "பால் பொங்கிற்றா ?" என்று கேட்பது மரபு.

பால் இனிப்பான வெல்லத்துடன் சேர்ந்து பொங்கி, சர்க்கரைப் பொங்கலாக ஆவதுபோல, நம்முடைய வாழ்க்கையிலும் தூய்மையான எண்ணங்களுடன் இனிப்பான சிந்தனைகள் வளர்ந்து பொங்கி ஆனந்தமான வாழ்க்கை அடைய முயற்சி செய்வோம்.

*(ஜெயேந்திர சுவாமிகள்)*

# மஹா சிவராத்திரியின் தோற்றமும் சிறப்பும்

**மூளாய் அருணாசலம்**

சிவ விரதங்களுள் சிறந்தது சிவராத்திரி. சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவை, சோம சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பக்க சிவராத்திரி, மாத சிவராத்திரி, மஹா சிவராத்திரி என்பன.

மஹா சிவராத்திரி மாசி மாத கிருஷ்ணபட்ச திரயோதசி மருவிய சதுர்த்தசித் திதி கூடிய தினத்தன்று வரும். சதுர்த்தசி சிவதோற்றமும் திரயோதசி சக்தி தோற்றமும் கொண்டவை. இன்று அர்த்த இராத்திரியில் சதுர்த்தசித் திதி நிற்கின்றமையால், இன்றைய தினம் மஹா சிவராத்திரி என்று கொள்ளப்பட்டுச் சிவாலயங்களில் சிவ வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும்.

சிவராத்திரியின் தோற்றம் பற்றிய வரலாறு ஒன்றைக் கந்தபுராணத்தின் 'அடிமுடி தேடு' படலத்தில் காணலாம்.

ஆயிரம் சதுர்யுகங்கள் சேரமுடியும் காலம் பிரமதேவருக்கு ஒரு பகற் பொழுது ஆகும். அன்றைய பகற் பொழுது முடிந்திட இரவு வந்தது. இரவுக் காலமாகிய ஆயிரம் சதுர்யுகங்களிலும் பிரம தேவர் நித்திரையில் இருந்தார். (யுகங்கள் நான்கு, கிருதயுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம். இவை நான்கும் கொண்டது ஒரு சதுர்யுகம். சதுர்யுகங்கள் ஆயிரம் கொண்டது ஒரு கற்பம். இது பிரமதேவருக்குப் பகற் பொழுது)

பிரம தேவர் நித்திரையில் இருந்த பொழுது அக்கினி ஒடுங்கியது. சூரிய சந்திரர்களும் நட்சத்திரங்களும் அழிவுற்றன. அழிவு என்பது இல்லாத முனிவர்களும் ரிஷிகளும் அழிவின் பெருக்கத்தைக் கண்டு அச்சமடைந்து "சனலோகம்" சென்றனர்.

அக்காலத்தில் உலக மாதாவாகிய காமாட்சி அம்மை தவம் புரிந்த காஞ்சிப் பதியும் சீர்காழியும் தவிர்ந்த ஏனைய இடங்களில் எல்லாம் சமுத்திரங்கள் சூழ்ந்து பாதாள உலகங்கள் ஏழிலும் நீர் நிறைந்து காணப்பட்டது. பிரளய காலத்தில் நீரில் மிதந்ததனால் சீர்காழிக்குத் 'தோணிபுரம்' என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. சீர்காழியில் சிவ பிரான் 'தோணியப்பர்' என்ற திருநாமத்துடன் கோயில் கொண்டு அருள் பாலிக்கிறார்.

'ஜலப் பிரளயம்' என்று சொல்லப்படுகிற அந்தக் காலத்தில் நாராயணக் கடவுள், ஒரு குழந்தை வடிவுடன் இளம்பிறை சூடிய சிவ பிரானைத் துதித்துக் கொண்டு, ஒரு 'ஆல் இலை'யில் மிதந்த வண்ணம் யோக நித்திரை செய்தார். யோக நித்திரை கலைந்த நாராயணக் கடவுள், பூமியைக் காணாமையால் அது பாதாளத்தில் இருப்பதை அறிந்து, வெள்ளைப் பன்றி உருவெடுத்துச் சென்று, பூமியைக் கொம்பின் மீது இருத்தி, எடுத்து வந்து முன்போல இருத்தி விட்டு 'நாமே நிறுத்தினோம்' என்ற அகந்தையுடன் மீண்டும் நித்திரை செய்தார்.

பிரமதேவரின் இரவுப் பொழுதாகிய ஆயிரம் சதுர்யுகங்களும் முடியப் பகற் காலம் வந்தது. துயில் நீங்கிய பிரமதேவர் படைப்புத் தொழிலைத் தொடங்க, பிரளய நீராகப் பெருக்கெடுத்த சமுத்திரங்கள், அந்தந்த உலகுக்குச் சென்றன. பிரமதேவர் தேவரையும் படைத்து, அவை சிறந்து பெருகும்படி செய்தார். இந்திரனை வானுலக ஆட்சியில் நியமித்தார். திக்குப் பாலகர்களை அவரவர்களுடைய பதவிகளில் இருத்தினார்.

பின்னர், தான் சிருஷ்டித்த உலகங்களை உற்றுநோக்கி, 'என்னிலும் மேலான தலைவர் இல்லை' என்று கர்வம் கொண்டு நின்ற போது, நாராயணக் கடவுள் 'உலக ஆக்கத்திற்கும் அழிவிற்கும் நானே காரணம்' என்ற அகந்தையுடன் யோக நித்திரையில் இருப்பதைக் கண்டார்.

அவர் அரி துயில் புரியும் அழகைக் கண்ட பிரத தேவர் பொறாமை கண்டு அவருடைய மார்பில் அடித்து "துயில்கின்ற நீ யாரடா" என்று இறுமாப்புடன் கேட்டார். "என்னைத் தெரியவில்லையா உனக்கு. உனது தந்தை நான். உலகங்களும் உயிர்களும் ஏனைய பிறவும் என்னால் தான் நிலை பெற்று உள்ளன. நீ அறிந்திலையோ? என்று மமதையுடன் வினவினார் நாராயணக் கடவுள்.

"யாமே மேலானவர் ..... யாமே மேலானவர்" என்று தம்முள் செருக்கடைந்த திருமாலும் பிரமனும் கொடிய போர் செய்தனர். போரின்போது பிரயோகிக்கப்பட்ட படைக்கலங்களின் வெப்பம் தாங்காது சமுத்திரங்கள் வற்றின. உலகங்கள் எரிந்தன. உயிர்கள் துன்புற்றன. சந்திர சூரியர் செல்லும் தடம் அறியாது தடுமாறினர்.

உயிர்களையும் உலகங்களையும் அழிவிலிருந்து காப்பாற்றத் திருவுளங் கொண்ட சிவபிரான் இருவருக்கும்

நடுவில் ஒரு ஜோதிப் பிழம்பாகத் தோன்றினார். பிரமவிட்டுணுக்கள் பிரயோகம் செய்த படைக்கலங்கள் ஜோதியில் விழுந்து வெந்து நீறாயின.

அவர்கள் செய்வதறியாது திகைத்து நின்ற போது "இந்தச் சோதியின் அடியையும் முடியையும் கண்டவரே உயர்ந்தவர்' என்று விண்ணில் ஒரு குரல் எழுந்தது.

'இந்தச் சோதியின் அடியை யான் தேடுவேன்' என்று கூறிய திருமால் பன்றி உருவெடுத்து மண்ணுள் புகுந்தார். அன்னப்பட்சி வடிவம் கொண்ட பிரமா முடியைக் காண்பேன்' என்று விண்ணில் பறந்தார். பல காலம் தேடிய இருவரும் அடியையும் முடியையும் காணாது, வெட்கமும், துக்கமும், சலிப்பும் அடைந்து, தம்மிலும் மேலான 'ஒன்று' உண்டு என்று தெளிந்த சிந்தையராகிச் சோதியைத் துதித்தலும் சோதியினுள்ளே தம் உருவைக் காட்டி நின்றார் சிவபிரான்.

சிவபிரானைத் தரிசித்த திருமாலும் பிரமனும் "ஐயனே அன்புடையவர்க்கு மெய்யனே, மாயையினால் அறிவு மயங்கி அகந்தை கொண்டு வீணே போரிட்டோம். தேவரீருடைய அடியையும் முடியையும் அறியும் ஆற்றல் எமக்கு இல்லை. எங்கள் பிழையைப் பொறுத்து அருள் புரிக" என்று வேண்டி நின்றனர்.

கருணையே வடிவான கண்ணுதற் கடவுள் பிரம விட்டுணுக்களை அன்புடன் பார்த்து, "நீவிர் விரும்பிய வரங்களைக் கேளுங்கள் தருவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அளவிலா ஆனந்தம் அடைந்த பிரமனும் திருமாலும் தேவாதி தேவா, தாங்கள் அக்கினிப் பிழம்பாகக் காட்சி தந்த இந்த இரவு சிவராத்திரி என்று பெயர் பெறவும், ஜோதியில் விட்டிற் பூச்சிகளால் விழுந்து, வெந்து நீறாகிய எங்கள் படைக்கலங்களைத் தந்து அருளுவதுடன், யாம் புரியும் படைத்தல், காத்தல் ஆகிய இரு தொழில்களும் குறைவு இன்றி நிறைவு பெறவும் கிருபை செய்யும்" என்று இரந்து நின்றனர்.

அவர்கள் வேண்டியவாறு வரம் அருளிய சிவபிரான் "பிரம விட்டுணுக்களே" இன்றைய தினம் உள்ளன்புடன் எம்மை வழிபட்டு விதிப்படி விரதம் அனுட்டிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர் எமது திருவடிகளை அடைவர்" என்று கூறிச் சோதி உருவைச் சுருக்கி ஒரு மலையாகக் காட்சி கொடுத்தார்.

இன்று சிவலிங்க வடிவாகத் தோன்றும் அந்தக் குன்று திருவண்ணாமலை என்னும் சிவதலத்துக்கு அருகில் உள்ளது. சிவபிரான் ஜோதியாகத் தோன்றிய இரவு சிவராத்திரி என்றும், ஜோதியுள் சிவலிங்கமாகக் காட்சியளித்த நேரம் "லிங்கோற்பவ காலம்" என்றும் போற்றப்படுகிறது.

**(நன்றி: தினகரன் - 02.03.1997)**

---

# அமிர்தசரசில் அற்புதக் கோயில் !

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக – சீக்கியர்கள் வாழும் பகுதி பஞ்சாப் எனப்படும் !

நெஞ்சத் துணிச்சல் உடையவர்கள்! நேர்மையானவர்கள்! குருவை வணங்கிடும் கோட்பாடு உடையவர்கள்! இந்தியாவில் பண்பாடு உடைய மாநிலம் பஞ்சாப் மாநிலம்! பிச்சைக்காரர்களே இல்லாத மாநிலம்! உழைப்பின் உயர்வை உணர்ந்தவர்கள் வாழும் மாநிலம்! இங்கே அமிர்தசரஸ் என்ற அவர்கள் புண்ணிய தலத்திற்கு அழைத்துச் சென்றார்கள். பிறமத ஆலயங்களை இங்கே எங்கேயும் காணமுடியாது! குருநானக்கின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அவரையே தெய்வமாக வணங்கி வரும் பூமி அது!

அங்கு ஒரு நாள் என்னை அழைத்து, என்றும் எவரும் கண்டிராத அளவுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார்கள்! அப்போது சீக்கியர்களில் ஒருவர் "நாங்களும் உங்கள் இந்து மதத்தில் ஈடுபாடு கொள்ள முடியும்!" என்றார். அதற்கு நான் திருஷ்டாந்தமாக விளக்கம் கொடுத்தேன்.

சீக்கியர்களிடத்தில் உள்ள ஒழுங்கும் கட்டுப்பாடும் வேறு இடத்தில் காண்பது அரிதுதான்!

"எங்களுக்குக் கண்ணன் கீதையிலே உபதேசம் செய்தாலும், துஷ்டர்களை, அதர்மத்தை ஒழிக்க அர்ச்சுனனை இடுப்பில் வாள் வைத்திருக்கச் சொன்னார் பகவான்! அதுபோல, உங்கள் குருவாகிய குருநானக் என்பவரும், ஐந்து அங்கங்களை – அடையாளங்களை இடுப்பில் கத்தியை வைக்கச் சொன்னார்! அடிப்படைக் கருத்தில் இரண்டும் ஒன்றுதான்! ஆகவே, நீங்கள் என்னிடத்தில் – இந்து மதத்தில் தாராளமாக ஈடுபாடு கொள்ளலாம்" என்றேன்.

பரம்பொருள் ஒன்றுதான்! விநாயகரும், முருகனும், அம்பாளும், விஷ்ணுவும், அனைத்து – மூர்த்தங்களும், பரம் பொருளாம் ஈசனின் கூறுபாடுகள்! ஈசன் ஒருவனே என்று ஏற்றுக் கொண்டுள்ள மதம் இந்து மதம்! "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதும் திருமூலர் வாக்குதானே!

(ஜெயேந்திர சுவாமிகள்)

சிறப்புக் கவிதை

# சீவகாருண்யமும் சிவன் கருணையும்

அமரர் தமிழ்ப்பேரறிஞர் கி. வா. ஜகந்நாதன்

உடம்புடையார் அதுவரை உணவுதேடி
ஊட்டுகின்றார் ; அதுபோல, உள்ளம் ஓங்கித்
திடம்பெறவே அறிவென்னும் உணவை ஊட்டிச்
சிறப்புறுதல் நலமாகும் ; உடலும் நம்பால்
இடமுடைய உள்ளமதும் உயர்தல் போல
எம் உயிரும் வளர்வதற்கோர் உணவு வேண்டும்
மடமகல வாழ்ந்தவர்கள், இறைவன் தந்த
வளவருளே உயிருக்கோர் உணவாம் என்றார். 1

உயிர்வளர இறைவனருள் வேண்டும் என்றால்,
உயர்ந்த அந்த அருள் பெறுதற் கெதுஆ றாகும்?
பயிர் வளர்ந்தால் விளைவெடுத்து நெல்லைச் சேர்த்துப்
பாங்குபெற உணவுசமைத் துண்ணு கின்றோம்.
செயிரகலும் அருளுணவுக் கமைந்த மூலம்
சீவரிடத் தன்பு கொள்ளும் செயலே ஆகும்.
மயலகலச் சிவனிடத்தில் அன்பு கொண்டால்
மாப்புவியி லுயிர்க்கன்பு செய்தல் கூடும். 2

ஆதலினால் இறைவனிடத் தன்பு செய்தே
அவனெல்லா உயிர்களுக்கும் தந்தை யென்று
வேதமுரை தருமுண்மை தேர்ந்து, நந்தம்
வியன் தகப்ப னார்மைந்தர் உயிர்க ளென்ற
போதமடைந் தாலிஅக்கால் உலகத் தாரும்
பொருந்தியசோ தரரென்ற நிலையைக் கொள்வோம்
மீதுபுகழ் அதனாலே இறைவன் செய்யும்
விளங்கருணைப் பெற்றுயிரில் இன்பம் கொள்வோம். 3

சீவகா ருணியத்தை வளர்ப்ப வர்க்குச்
சிவன் கருணை உரிமையென அடைதல் கூடும்;
பூவிலொரு காணியிலே தினைவி ளைத்தால்
போதுமறு வடைநாளில் தினைஅ றுப்போம்;
ஆவலோடுஞ் சீவர்பால் கருணை வைத்தால்
அரன் நம்பால் கருணைவைப்பான்; அதனால் இங்கே
யாவருந்தம் உயிர்வளரப் பெறுவார்; இஃதே
எம்மதமும் போதிக்கும் உண்மையாமே. 4

*நன்றி : சட்டக் கல்லூரி சிவராத்திரி மலர் (1967).*

# வாய் மொழிக் குறள்

முனைவர். மு. குருவம்மாள்
தலைவர், தமிழ் இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலம்
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம், தமிழ் நாடு, இந்தியா.

*"சமூக பொருளாதார மானுட உளவியலை அடிப்படையாக கொண்ட வாழ்க்கைத் தத்துவத்தின் வார்த்தை வெளிப்பாடே பழமொழி. "பழகிய மொழிகளின் அடியாழத்தில் உள்ள செய்தி மனித குலத்தின் செவ்விய சிந்தனைக்குச் சான்று. முதுசொல்லின் முதிர்ந்த கருத்துக்கள் மனிதனை நெறிப்படுத்தும் மருத்துவக்கையேடு" என எடுத்துரைக்கும் முனைவர் குருவம்மாள் 'இந்து ஒளி" க்கென விசேடமாக எடுத்துரைக்கும் பழமொழிகள் பற்றிய அடியாழக் கருத்துக்கள் இவை.*

## கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

கோயிலின் பெயரால் குழப்பங்களும், கடவுளின் பெயரால் கலகங்களும் பெருகிவரும் இந்நாளில் இந்தப் பழமொழி தேவைதானா?

"கோ" என்றால் அரசன். "இல்" என்றால் வீடு. "கோயில்" என்றால் அரசனின் வீடு. அரசனின் வீடு அரண்மனை தானே. "அரண்" என்றால் காவல். "மனை" என்றால் இடம். அரண்மனை என்றால் காவல் மிகுந்த இடம். அரசனின் இருப்பிடத்தை அரண்மனை என்றும் ஆண்டவனின் இருப்பிடத்தைக் கோயில் என்றும் கூறுவதன் உட்பொருள் என்ன?

படித்தினைக்கு இடமிருந்தால் குடித்தனத்திற்கு விட்டு வாடகைக்கு வழிதேடும் காலமிது. கையகல இடத்தில் இருக்கும் கருவறைத் தெய்வத்திற்கு இடம் அகன்ற பெரிய கோயில்கள் ஏன், மடைப்பள்ளிகள் ஏன், தானியக் கிடங்குகளும் ஏன்?

வணங்குவதற்கும் வழிபடுவதற்கும் தேர்த் திருவிழாக்களுக்கும் மட்டும் கோயில்கள் அக்காலத்தில் பயன்படவில்லை. மாறாக மக்கள் கூடும் பொது மன்றங்களாகவும் ஐயம் அகற்றும் அறிவுத் திருக்கோயில்களாகவும் அறிஞர்களின் விவாத மேடைகளாகவும் வீரர்களின் விளையாடு களங்களாகவும் புலவர்களின் புலமை விளக்கம் பெறும் இடங்களாகவும் கலைஞர்களின் கலை வளர்க்கும் அரங்குகளாகவும் கோயில்கள் விளங்கின.

அரசர்களின் நிலையான அறிவுப்புகளைக் கொண்ட கல்வெட்டுகள் ஆவணங்களாகி நிற்பதும் கோயில்களில் தான். மக்களின் ஈரத்தையும் வீரத்தையும் கொடையாகவும் வெற்றியாகவும் பறை சாற்றி நின்றன கோயில்கள். மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகக் கொண்டு சமூக சேவை மையங்களாகத் திகழ்ந்தன கோயில்கள். மக்களிடையே மனித நேயத்தையும் பாதுகாப்பு உணர்வையும் வளர்த்து வந்தவை கோயில்கள்.

பயிர்த் தொழிலை உயிர்த் தொழிலாகக் கொண்ட மக்கள் விளை பொருட்களில் ஒரு பகுதியைத் தாங்களாகவே விரும்பி, கோயிலுக்கு காணிக்கையாக செலுத்தி வநதனர். பொது மக்களின் பலவகை காணிக்கைப் பொருட்களும் ஆண்டவனின் கருவூலத்தைச் சென்றடைந்தன. நீர் – நெருப்பு – காற்று – ஆகிய இயற்கைச் சீற்றங்களால் வெள்ளம் – புயல் – பஞ்சம் வந்த போது உணவும் உடையும் இருப்பிடமும் இழந்த மக்களின் பொது வீடாக கோயில்கள் விளங்கின. போர்க் காலங்களில் முதியவர்கள் – பெண்கள் – குழந்தைகள் – நோயுற்றவர்கள் போன்ற போர் செய்ய இயலாதவர்களின் புகலிடமாயின கோயில்கள். எனவே ஆக்கப்பூர்வமாக தங்களை வளர்த்துக் கொள்ளவும், அழிவுக் காலத்தில் தங்களைக் காத்துக் கொள்ளவும் உதவும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறியது சிந்தனைக்குரியது.

## ஆத்துக்குள்ளே இருந்து அரஹரான்னாலும் சோத்துக்குள்ளே இருப்பான் சொக்கப்பன்.

இந்தப் பழமொழி இப்போது சாப்பாட்டு ராமர்களை குறிப்பதாக மட்டுமே பயன்படுகிறது. கடவுள் நம்பிக்கை நிறைந்த நமது கிராமங்களில் ஏழ்மையும் நிறைந்திருக்கிறது. ஊரெல்லாம் பட்டிதொட்டி, பேரெல்லாம் குப்பன் சுப்பன், சோறெல்லாம் கூழுங்கஞ்சி. அந்நாளில் நேற்றைய கிராமங்களில் நித்தம் நித்தம் நெல்லுச் சோறுக்கு வாய்ப்பில்லை. உண்ண எதுவும் கிடைக்காத போது உண்ணாமல் இருந்தால் பட்டினி, உண்ணுவதற்கு இருந்தும் உண்ணாமல் இருந்தால் விரதம். எப்போதும் பட்டினிக்கு பழக்கப்பட்ட கிராமத்து மக்கள் சில நேரம் விரதம் இருப்பதும் உண்டு.

நவீன இயந்திரங்கள் இல்லாத அந்த நாட்களில் கிராமத்துப் பெண்கள் விலா எலும்பு தெறிக்க கல்லுரலில் குத்தி புழுங்கல் அரிசியை நொறுக்காமல் புடைத்தெடுத்து சோறு ஆக்கும் போது நொறுங்கிநொய்யத் தவிடாகிப் போவார்கள். இருந்தும் விரத நாட்களில் வெள்ளைச் சோறாக்குவதில் மகிழ்ச்சியோடு ஈடுபடுவார்கள். பச்சத் தண்ணீர் பல்லில் படாமல் காலையில் இருந்து கடுமையான விரதத்தோடு ஆற்றிலோ, குளத்திலோ, கிணற்றிலோ குளித்துக் கரையேறுவதற்குள் கடவுள் நினைப்பை முந்திக்கொண்டு உணவு நினைப்பு ஓங்கி நிற்கும் என்பதால்,

"ஆத்துக்குள்ளே இருந்து அரஹரன்னாலும்
சோத்துக்குள்ளே இருப்பான் சொக்கப்பன்" என்று சொல்லி இருக்கலாம். இருந்தாலும்,

"அகத்தின் உள் இருந்து அர ஹர என்றால்
சுக துக்கம் அறுப்பான் சொக்கப்பன்"

என்று சிந்திக்க இடம் உள்ளது. கை ஒன்று செய்ய, வாய் ஒன்று சொல்ல, மனது ஒன்றை நினைக்க கடவுளுக்கும் கோவிலுக்கும் தொடர்பே இல்லாத காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது இன்றைய வழிபாட்டு முறை. கடவுளின் பெயரை உதட்டளவில் மாத்திரம் உச்சரிக்காமல் மனதை ஒருமுகப்படுத்தி ஆண்டவனின் நினைப்பை உள் நிறுத்துகிறவர்களுக்கு இன்ப துன்பம் கடந்த முக்திநிலை கிடைக்கும் என்பதை உணர்த்துவது இந்தப் பழமொழி. இந்தப் பழமொழியை

"அகத்தின் உள் இருந்து அரஹர என்றால்
சோதிக்குள் இருப்பான் சொக்கப்பன்"

என்றும் சிந்திக்கலாம். "சோதிக்குள் இருப்பான்" சொக்கப்பன்" என்ற தொடர் மருவி காலப்போக்கில் "சோத்துக்குள் இருப்பான் சொக்கப்பன்" என்றாகிவிட்டது.

எல்லா மதங்களும் இறைவனை ஒளி வழியாகக் காண்கின்றன. திருவண்ணாமலையில் தீப வழிபாடுதான் சிவ வழிபாடு. ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் இறைவன் உள் ஒளியாக விளங்குகின்றான். உள்ளத்தில் உள்ளானடி சகியே அதை நீ உணர வேண்டுமடி, உள்ளத்தில்காண்பாய் எனில் கோயில் உள்ளேயும் காண்பாயடி என்று சித்தர்கள் உணர்த்துவதும் இதனைத்தான்.

## குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படு

இப்படி ஒரு பழமொழியா? குட்டுப்படுவதற்கென்று ஒரு பிறவியா? மோதிரக்கையால் குட்டுப்படுவது கௌரவமா? இருப்பவன் இல்லாதவனைக் குட்டுவதை சமுதாயம் ஆதரிப்பதையும் அங்கீகரிப்பதையும் ஆனந்தப்படுவதையும்தானே இந்தப் பழமொழி வெளிப்படுத்துகிறது. பட்டம், பதவி, பணம், அந்தஸ்து, ஆட்சி அதிகாரம் என்று உயர் மட்டத்தில் இருப்பவர்களின் வாயடியும் கையடியும் சகித்துக்கொண்டு சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பது நியாயமா?

குட்டுப்பட்டாலும் மோதுகிற கையால் குட்டுப்படு என்ற தொடரில் உள்ள மோதுகிற என்ற சொல் மோதிர என்று மருவி இருக்க வேண்டும். ஒரு கோழையை எதிர்த்து வெற்றி பெறுவதைவிட, ஒரு வீரனை எதிர்த்து தோல்வி அடைவது சிறந்தது என்ற கருத்தை வெளிப்படுத்துவது தான் குட்டுப்பட்டாலும் மோதுகிற கையால் குட்டுப்படு என்ற பழமொழி என்றாலும் ஆற்றலும் போற்றலும் மிக்கவனிடம் குட்டுப்படத்தான் வேண்டுமா?

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். சிரம் என்பது தலையைக் குறிக்கும். தலை நிமிர்ந்து நடப்பதையும் தலைக்கனம் என்று ஏசுவதையும் தலை குனிவு என்று நாணுவதையும் வாழ்க்கையாகக் கொண்டவர்கள் தலையில் அடிபடச் சம்மதிப்பார்களா? தலையிலே அடியும் காயமும் தோல்வியின் சின்னங்கள். தலையைச் சிரைத்துக் கழுதைமேல் ஏற்றி கரும்புள்ளி செம்புள்ளி குத்துவது கடுமையான தண்டனை. இளையவர்களின் தவறு திருத்தும் நோக்கில் மூத்தவர்கள் செல்லமாகவும் சினந்தும் வலது கை விரல்களை மடக்கிக்கொண்டு உச்சந்தலையில் ஓங்கி ஒரு குத்து அழுந்த வைப்பதற்கு பெயர்தானே குட்டுதல்? இளையவர்களின் தவறு திருத்தும் மூத்தவர்கள், தங்களது சொந்த வாழ்க்கையில் தவறே செய்வது கிடையாதா? அப்படித் தவறு செய்கின்ற மூத்தவர்களைத் திருத்த சிறியவர்களுக்கு அதிகாரம் கிடையாதே. தங்களது தவறை தாங்களே ஒப்புக்கொண்டு தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொள்ளுகிற தண்டனை ஒன்று உண்டு. அதன் பெயர் தோப்புக்கரணம். எதற்கெடுத்தாலும் அடுத்தவரைக் குட்டிக்கொண்டு இருப்பவர்கள் தங்களைத் தாங்களே குட்டிக்கொள்ளுகிற இடம் பிள்ளையார் கோவில். மோதகம் கையில் ஏந்துகிற பிள்ளையார் இருக்கும் இடத்தில் சென்று முட்டிக்கொண்டும் மோதிக்கொண்டும் பாவத்துக்கு பரிகாரம் தேடுகின்றவர்களாக சொல்லப்பட்ட பழமொழிதான் "குட்டுப்போட்டாலும் மோதகக் கையானுக்குக் குட்டுப்போடு" என்பதாகும். மோதகக் கை என்பது மோதிரக் கை என்று மருவியது கவனிக்கத்தக்கது.

---

### ஈசனே சிவகாமி நேசனே

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டல மிரண்டேழும் நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும்
பிறவியும் நீ ஒருவநீயே!
போதாதி பேதம் நீ பாதாதிகேசம் நீ
பெற்ற தாய் தந்தை நீயே
பொன்னும்நீ பொருளும்நீ இருளும் நீ ஒளியும்நீ
போதிக்க வந்தகுரு நீ
புகழொணா கிரகங்களொன்பதும் நீ இந்த
புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிகளீன்ற அப்பனே
என்குறைகளார்க் குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே!

*(நடராஜப்பத்து)*

### எதிர்காலத்தை உருவாக்குகிறவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய பணிகள் !

விடியுமுன் எழுந்து யோகாசனம் செய்து உடலைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

நாமாவளி சொல்லி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் !

நீதி போதனைகளை, வரலாற்றுச் சம்பவங்களைக் கேட்டு "ஆன்மா" வைத் தூய்மைப்படுத்த வேண்டும் !

ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு முன்னோர்களின் முயற்சியினை வியந்து, எண்ணத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி, அச்சத்தைப் போக்கி, பொறாமையைப் பொசுக்கி, தீய எண்ணங்களை விட்டு, ஆன்மீகத் துறையில் பற்று ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

*(ஜெயேந்திர சுவாமிகள்)*

(பரிசுக் கட்டுரை)

# இந்து சமய மறுமலர்ச்சியில் சுவாமி விவேகானந்தரின் பங்கு

*(சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மாமன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பிரிவில் முதலாவது பரிசைப் பெறும் கட்டுரை)*

அனுஷா ஸ்ரீரமணன்
புனித பேர்ணதேத் தமிழ் மகாவித்தியாலயம், சிலாபம்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின், தலையாய சீடராக ஒளிபரப்பிய சுவாமி விவேகானந்தர் உறங்கிக் கிடந்த இந்து சமயத்தைத் தட்டி எழுப்பியது மட்டுமல்ல, அதன் தாற்பரியத்தையே உலகிற்கு உணர்த்தி, இந்து சமயம், வாழவும், வளரவும், சாதனைகள் படைக்கவும் வித்திட்டார் எனலாம். சுவாமிகளின் உள்ளம் ஒரு பெரிய சமுத்திரம். அது ஒரு சாதாரண சமுத்திரமன்று, சிறந்த விலைமதிக்க முடியாத, இந்து இரத்தினாகரம். வழிந்தோடும் மாபெரும் சமுத்திரவெள்ளமெனலாம். இவ்வெள்ளம் இந்து சமயத்தை ஊடுருவி செழிப்பூட்டி, வனப்பூட்டி, மறுமலர்ச்சி ஒளியூட்டியதெனலாம்.

சுவாமிகள் இந்துசமயத்திற்கு ஊட்டிய மறுமலர்ச்சி, காலத்தாற் கரையாதது. மதிப்பும், ஒளியும் உறுதியும் கொண்டு என்றும் உலகில் நிலைத்துநிற்கக் கூடியது. காலத்திற்கு காலம் மாறுபாடில்லாது இந்துப் பரம்பரையினரின் நெஞ்சங்களில் நிலையாக ஒளிவீசும் அணையா விளக்கைப் போன்றது. முன்னோரான முனிவர்களினால், உரைக்கப்பட்ட வேத ஆகம, இதிகாச சாஸ்திரங்களின் பெருமையை, மகிமையை, உண்மையை, உணராமல் இந்துக்கள் உறங்கிய உள்ளத்தினரான போது சுவாமி விவேகானந்தர் ஜாம்பவானைப் போல் வந்தார். இந்துக்களுக்கு மட்டுமல்ல, உலகத்து மக்களுக்கே இந்து மதத்தின் ஆழத்தையும், அகலத்தையும் உயரத்தையும், உறுதியையும், கூர்மையையும் படம்பிடித்துக் காட்டிய பெருமை, மகிமை, மாவீரன் சுவாமி விவேகானந்தரையே சாரும். இதை எவரும் மறுக்கவோ தட்டிக்கழிக்கவோ முடியாது.

என்றும் விழிப்போடு வீரராய் விளங்கிய விவேகானந்தர், வழங்கிய உபதேசமொழிகளும், வீரவுரைகளும், இடித்துரைகளும், தத்துவமுத்துக்களான ஞானக்கருவூலங்களும் குட்டிக் கதைகளாக, இந்து ஞானத்தை தட்டியெழுப்பிய சிந்தனைச் சிதறல்களும், இந்து சமயத்தில் மாபெரும் மறுமலர்ச்சியை ஓங்காரமாக ஒலிக்கச் செய்ததெனலாம்.

உலகளாவிய ரீதியில் இந்துசமய மறுமலர்ச்சிக்கு, உரமூட்டிய பெருமை சுவாமிகளையே சாரும். இன்றைக்கு நூற்றிஐந்து வருடங்களுக்கு முன்பு, அன்னார் 1893 செப்டம்பர் 11ம் நாள் அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரத்திற் கூடிய சர்வசமயப் பேரவையில், பொன்வாய் மலர்ந்து தத்துவ மழை பொழிந்து அறியாமை எனும் அழுக்கைக் கழுவியது, இந்து சமய வரலாற்றில் ஈடிணையற்ற கோடிப்பலன் நல்கும் நிலையான ஓர் நிகழ்ச்சியாகும்.

அன்று கிறிஸ்தவமதத்தின் பெருமைகளை உலகிற்குப் பறைசாற்றும் நோக்குடன் சர்வமதப் பேரவை கூட்டப்பட்டபோதும், சுவாமிகள் இந்து மதத்தின் இனிய பரந்த தத்துவத்தை, மகிமையை அந்நிய மதத்தவரும் அறிய அறைகூவலிட்டார். இதன் விளைவால், கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்த அனேக வெள்ளையர்கள் கூட அவர்காட்டிய இந்துமத நெறியைப் பின்தொடர்ந்தது மட்டுமல்ல, அவருடன் இணைந்து, இந்துமத வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும், பொருளாதார உதவிகளையும் தமது அர்ப்பண சேவைகளையும் வாரி வழங்கினார்கள். சேவியர் குடும்பத்தினர், கொட்வின் போன்றோர் இந்துமறைபரப்ப சுவாமிகளுடன் இரண்டறக் கலந்தனரெனலாம்.

1893 செப்டம்பர் 11ம் நாள்முதல் 27ம் நாள்வரை, சிக்காகோ சர்வமதப் பேரவையின் சுவாமிகளின் உபதேசத்தால் அமெரிக்க நாடென்ன உலகமே ஆடியதெனலாம். "நாவாடினால் நாடாடும்" என்னும் பழமொழிக்குப் பொருத்தப்பாடுடைய ஒரேயொரு புண்ணிய புருஷராக சுவாமிகள் ஒளிவீசினார்கள். தெய்வீகச் செய்திகளாலும், ஞானவழி நடத்தல்களாலும், இந்துசமய மறுமலர்ச்சியை மலரவைத்த ஒரேயொரு உன்னதச் செம்மல் சுவாமிகள் ஆவர்.

இந்து சமய வளர்ச்சிக்காக, தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அண்ணல் அர்ப்பணமாக்கி அமைதி கண்டார்கள், இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்

சொற்பொழிவுகளை அர்த்த புஷ்டியாக மக்கள் மனதிற் சென்றடையச் செய்தார். இந்துசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்த மற்றவர்களையும் தூண்டிச்செயற்பட வைத்தார்.

"உங்களது சுகசௌகரியங்கள், உங்களது இன்பங்கள், உங்களது பெயர், புகழ் பதவி அல்லது உங்கள் உயிர் ஆகியவற்றையே சமர்ப்பணம் செய்யுங்கள் . மனிதர்களாகிய சங்கிலித் தொடரைக் கொண்ட ஒரு பாலத்தை உண்டு பண்ணுங்கள். அவற்றின் மீது நடந்து லட்சக்கணக்கானவர்கள் இந்த வாழ்க்கைக் கடலைக் கடப்பார்கள்" என்று ; ஏனைய இந்து மதத்தவர்களுக்கும் அறை கூவலிட்டு அழைப்பு விடுத்தார். அவரது நாவன்மையால் மாபெரும் இந்துசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

சுவாமிகள் அமெரிக்காவில் தனது சீடர்கள் உதவியுடன் 'நியூயோர்க் வேதாந்த சொஸைடி"யை ஆரம்பித்து வைத்தார். வேதாந்த வகுப்புகளை அமெரிக்காவிலேயே நடத்தியுள்ளார். ஆங்கில அறிவில் ஆழங்கண்ட சுவாமிகள் கவித்துவமாக போதிப்பதிலும் பேர்போனவரே. இவரது சொற்பொழிவுகள் காற்றோடு கலக்கவில்லை. அனைவரது கரங்களிலும் தவழ, அச்சிடப்பட்டு ஏடுகளாக, நூல்களாக மலர்ந்து மறுமலர்ச்சி கண்டுள்ளது.

அமெரிக்காவில் ஒற்றுமை இயக்கத்தை உருவாக்கி இந்துமதத்துவத்தை விதைத்தார் சுவாமிகள். தன்னைப் போன்று ஊழியர்கள் அனேகம் பேரை உருவாக்கி இந்துமத மறுமலர்ச்சியை முன்னெடுத்துச் சென்றார். இந்துக்களின் சங்கங்கள் கழகங்களை நிறுவினார். தலைமை தாங்கும் திறமையை போதனை மூலம் புகட்டி நல்ல இந்துமதத் தலைவர்களை உருவாக்கி இந்துமதத்தைக் கட்டி எழுப்பினார் சுவாமிகள். காலத்திற்குக் காலம் எத்தனையோ ரிஷிகள், துறவிகள், ஞானிகள் தோன்றி இந்துசமய வளர்ச்சிக்காகப் பாடுபட்டபோதும், சுவாமி விவேகானந்தர் சாதனைபடைத்து, மடமை படிந்த மனுக்குலத்திற்கு இந்துசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, ஆன்மிக அமைதியையும், சாந்தியையும் ஏற்படுத்தியதைப் போன்று, இன்றுவரை எவரும் உலகளாவிய ரீதியில் இந்துசமய மறுமலர்ச்சியையும், ஆன்மீக அமைதியையும் ஏற்படுத்தவில்லை. சுவாமிகள் ஏற்படுத்திய மறுமலர்ச்சி, நீண்டதொரு பாலமாகத் தொடர்ந்து போவதை நாம் இன்றும் காணுகின்றோம்.

இந்துமத மறுமலர்ச்சிக்காக, இளஞ்சிங்கங்களைத் தெரிந்து பயிற்சி அளித்தார். மனப்பூர்வமான மனிதர்களை அவர்தெரிந்து, அவர்களை மறுமலர்ச்சிக்காக வழிநடத்தினார். வலிமை மிக்க, ஆண்மையுள்ள, நம்பிக்கைவாய்ந்த, மனப்பூர்வமாகப் பணிபுரியத்தக்க இளைஞர்களை உருவாக்கி தேர்ந்தெடுத்தார் சுவாமிகள்.

அனைத்து இந்துமத மக்களையும் நோக்கி சுவாமிகள் கூறினார்கள். "உங்கள் ஆத்மாவிற்கு, அளவற்ற சக்தி இருக்கின்றது. இந்நாடு முழுவதையும் தட்டியெழுப்ப உங்களால் முடியும். உங்களில் ஒவ்வொருவரும், திடமான நம்பிக்கை கொள்ளுங்கள். தன்னம்பிக்கை கொள்ளுங்கள்." உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் செல்வோம். இளைஞன் பலமுள்ளவன். நல்ல ஆரோக்கியமுள்ளவன். கூரிய அறிவுள்ளவன் இத்தகையவனே இறைவனை அடைவான் என்று வேதங்கள் கூறும் உண்மையை இளைஞர்களுக்கு உணர்த்தி இந்து சமய மறுமலர்ச்சியை துரிதப்படுத்தி சாதனை புரிந்தார். உயர்ந்த இலட்சியத்தை உறுதிப்படுத்தி சாதனை புரிந்தார். உயர்ந்த இலட்சியத்தை உறுதிப்படுத்தி உலகிற்கு ஈந்த பெருமை சுவாமி விவேகானந்தரைச் சாரும்.

மேலே அலசி ஆராய்ந்தவற்றை ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து சுவாமி விவேகானந்தர் இந்து சமய மறுமலர்ச்சியில் வகித்த பங்கு வெள்ளிடை மலையாகின்றது. சுவாமிகளை இந்து சமயச் சமுத்திரத்தின் கலங்கரை விளக்கென்றால் அது மிகையாகாது. சுவாமிகாட்டிய இந்துசமய மறுமலர்ச்சிப் பாதையில் நாமும் வீறுநடைபோட்டு, இந்துமத தத்துவங்களை தரணி உணர வழிசமைப்போம் வாரீர் என அறைகூவலிடுகிறேன்.

*எழுமின்! விழுமின்!! செயல்மின் !!*

---

"கடல்நீர் தாகத்தைத் தணிப்பதில்லை. ஆனால் அதுவே மேகத்திலிருந்து மழையாகப் பொழியும் போது எல்லாவற்றுக்கும் பயன்படுகிறது. சாணம், தானே அழுக்கானாலும் சுத்திகரிக்க உதவுகிறது. குரு மக்களிலே ஒருவர் ஆனாலும் பிறவி நோயைப் போக்க வல்லவர்"

நடராஜரின் திருவடியில் 'ந', வயிற்றிலே 'ம', தோளிலே 'சி', வீசிய கையிலே 'வ', உயர்த்திய (அபய) கரத்திலே 'ய' என்று ஐந்தெழுத்தைக் குறிக்கிறது.

(நன்றி: சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்)

# ருத்ராட்ச மகிமை

திரிபுரதகனம் செய்வதற்கு முன் ஆயிரம் ஆண்டுகள் அகோரா ஸ்திரத்தைப் பெற சிவபெருமான் யோக நிஷ்டையிலிருந்தார். அவர் கண் விழித்ததும் மூன்று கண்களிலிருந்தும் நீர்த்துளிகள் விழுந்தன. வலது கண்ணான சூரிய விழியிலிருந்து விழுந்து நீர் கபில நிறத்தோடு பன்னிரண்டு வித ருத்ராட்ச விருட்சங்களாயின. அதை அணிபவருக்குத் திறமை, செல்வாக்கு, கௌரவம், தைரியம், ஆரோக்கியம், நன்னடத்தை, அரசாங்கத்தால் ஆதாயம் எல்லாம் கிடைக்கும்.

இடது கண்ணான சந்திர விழியிலிருந்து வழிந்த நீர் வெள்ளை நிறத்தோடு பதினாறு வகை ருத்ராட்சங்களாயின. இவற்றை அணிபவருக்குத் தைரியம், தன்னம்பிக்கை, அறிவு, ஆனந்தம், புகழ், திறமை, கம்பீரம், நீதி, சுகபோகமான வாழ்க்கை, தெளிவான சிந்தனை எல்லாம் கிடைக்கும்.

நெற்றிக் கண்ணான அக்கினி விழியிலிருந்து தோன்றியவை பத்து வகை ருத்ராட்சங்களாயின. இவற்றை அணிபவருக்குத் தாராள மனமும், சுறுசுறுப்பும், பணிவும் ஏற்படுவதோடு பலவிதமான பிரச்சினைகளும் தீரும்.

ஒரு முக ருத்ராட்சம் பாவங்களைப் போக்கக் கூடியது. இருமுகமுள்ளது தேவதேவி ஸ்வரூபம். மூன்று முகமுள்ளது அக்னி ஸ்வரூபம். சுக்ரன் மறைவுஸ்தானத்தில் இருக்கப் பிறந்தவர்களுக்கு சுக்ரபலத்தைப் பெருக்கும். நான்கு முக ருத்ராட்சம் சதுர் வேதங்களையும் கற்றபுண்ணியத்தைப் பெருக்குவதோடு ராகு பலத்தையும் கூட்டும். ஐந்து முகமுள்ள ருத்ராட்சம் புத பலத்தைப் பெருக்கிப் புத்தியை ஸ்திரப்படுத்தும். ஆறுமுக ருத்ராட்சம் சண்முக வடிவம். பகையை ஒடுக்கி, செல்வத்தை வளர்க்கும். வலது காதில் குண்டலம் போல் அணிவதால் தீய சக்திகள் நெருங்காது. ஏழுமுகம் மன்மதஸ்வரூபம். முற்பிறவியில் தங்கம், வெள்ளி முதலியவற்றைத் திருடிய பாபத்தைப் போக்கும். புருஷன் மனைவி ஒற்றுமையை வளர்ப்பதோடு கேது பலத்தை அதிகரிக்கச் செய்யும். எட்டு முகம் உடையது விநாயக ஸ்வரூபம். அனைத்துப் பாவங்களையும் போக்குவதோடு அஷ்டமத்துச்சனி, ஏழரை நாட்டுச் சனி போன்றவற்றால் ஏற்படும் இன்னல்களை வரவிடாமல் தடுக்கும்.

ஒன்பது முகமுடையது பைரவ ஸ்வரூபம். இதை இடது தோளில் அணிபவருக்குக் கடன் தொல்லைகள் தீரும். பிணி அண்டாது. பிரச்சினையின்றி வாழ்க்கை நடத்த முடியும். பல பாவங்கள் தீரும்.

பத்து முகமுடையது விஷ்ணு ஸ்வரூபம். கிரக தோஷங்களை நீக்கும். பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்களையும், பில்லி, சூனியம், ஏவல் போன்றவைகளையும் அண்ட விடாமல் தடுக்கக் கூடியது.

பதினொரு முகமுடையது ஏகாதச ருத்ர வடிவம். ஆயிரம் அஸ்வமேத யாகம், நூறு வாஜபேயம், கோடி கோதானம் செய்த பலனை அணிபவர் அடைவார்கள். தலையில் அணிந்தால் புத்தியைத் தெளிவுபடுத்தும். புண்ணியம் அதிகரிக்கும்.

பன்னிரண்டு முகமுடையது துவாதச ஆதித்த ஸ்வரூபம். இது பயத்தைப் போக்கக் கூடியது. விபத்தைத் தடுக்கக் கூடியது. ஆபத்து எதையும் அண்ட விடாமல் செய்து புண்ணியத்தைத் தரக் கூடியது. கோ மேத, அசுவமேத யாகம் செய்த பலனைக் கொடுக்கும். வியாதி வராமல் தடுக்கக் கூடியது. செவிகளில் அணிந்தால் அதிகப் பலனைத் தரும்.

பதின்மூன்று முகமுடையது சுப்ரமண்யரைப் பூஜை செய்வதற்கு ஒப்பானது. மனோ பீஷ்டங்களைப் பூர்த்தி செய்யும். பாவங்களைத் தீர்க்கும். தாயின் பீடையை அழிக்கும். இது சிறந்த வித்யா லாபத்தைக் கொடுக்கக் கூடியது.

பதினான்கு முகமுடைய ருத்ராட்சம் அணிந்தவன் சிவபெருமானாகவே கருதப்படுகிறான். அஷ்ட ஐஸ்வர்யங்களையும், போக, போக்கியங்களையும், பதினாறு பேறுகளையும் அளிக்கக் கூடியது. இது சகல பாபங்களையும் போக்கக் கூடியது. புத்ர, பௌத்ராதிகளைத் தரக் கூடியது.

ருத்ராட்சத்தை கயிற்றிலோ, அல்லது தங்கம், வெள்ளி இவற்றோடு சேர்த்துக் கட்டியோ அணியலாம். பக்தி சிரத்தையோடு அணிபவருக்கே முழுப்பலன் கிட்டும்.

சிரசில் 26, மார்பில் அணியும் மாலையில் 50 ருத்ராட்ச மணிகள். தோள்களில் 16, மணிக்கட்டில் 12, கழுத்தில் 27, 50, 108 மணிகள் கொண்ட மாலையும் அணியலாம். இருபத்தியொரு தலைமுறைகள் இவ்விதம் ருத்ராட்சம் அணிவதால் மோட்ச கதியை அடைகிறார்கள்.

ருத்ராட்சம் அணிந்தவருக்குப் பிட்சையிட்டால் பிட்சாடன மூர்த்தி திருப்தியுற்று வரங்களை அளிக்கிறார். பூணூலில் ருத்ராட்சம் அணிபவனை பிரம்மா ஆசீர்வதிக்கிறார். திதியன்று

ருத்ராட்சம் அணிந்த அந்தணர்கள் உணவுண்டால் பிதுர்கள் மகிழ்ந்து குலம் தழைக்க வாழ்த்துகிறார்கள். ருத்ராட்சத்தை அணிய வெட்கப்படுகிறவன் சம்சாரப் பிரச்சினைகளிலேயே உழன்று கொண்டிருப்பான்.

குளிக்கும் போதும், தூங்கும் போதும், சிரார்த்தம் நடத்தும் போதும், பிராயசித்த, பரிகார ஹோமங்கள் செய்யும் போதும் கழுத்தில் ருத்ராட்சம் இருக்கலாம். கழற்ற வேண்டியதில்லை. ருத்ராட்சத்தைத் தகுதியுடையவருக்குத் தானம் செய்தவர் சப்த சமுத்திரங்களிலும், எல்லாப் புண்ணிய நதிகளிலும் நீராடிய பலனை அடைகிறார்.

ருத்ராட்சத்தின் மேல் பக்க முகம் பிரம்மா, கீழ்ப்புறம் விஷ்ணு, நடுப்பகுதி ருத்திரன். வெண்மை மிகுந்திருப்பது சிவனாகவும், கருமை மிகுந்திருப்பது திருமாலாகவும், செம்மை அதிகமிருப்பது பிரம்ம அம்சம் அதிகமிருப்பதாகவும் கருதப்படுகிறது.

ருத்ராட்சத்தைத் தினமும் கண்ணால் கண்டாலே பெரும் புண்ணியம். கையால் ஸ்பரிசித்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டால் அதை விடப் புண்ணியம். அணிந்து கொண்டவரின் புண்ணியப் பலனோ கோடி மடங்கு.

நெல்லிக் கனி அளவுள்ளது உத்தமம். இலந்தைப் பழ அளவுள்ளது மத்திமம். கடலை அளவுள்ளது அதமம்.

வித்யா லாபத்தை விரும்புகின்றவர் வெள்ளை மணியையும், அரசியல், காவல்துறை, எல்லைப் பாதுகாப்பு, துப்பறியும் துறை, வழக்கறிஞர் போன்ற பணியிலிருப்பவர்கள் செம்மையான ருத்ராட்சத்தையும், வணிகத்துறையில் இருப்பவர்கள் பொன்னிற (செம்மையும், வெண்மையும் கலந்திருக்கும்) மணிகளையும், உழைப்பாளர் வர்க்கம் கருமை நிறமணிகளையும் ஆராதிப்பதும், அணிவதும் வெற்றியையும், லாபத்தையும் கொடுக்கும்.

முள்ளில்லாதவை, பூச்சி அரித்தவை, பிளவு பட்டவைகளை அணியக் கூடாது. இயற்கையில் துவாரம் உள்ளவை உத்தமம். மனிதர்களால் துவாரமிடப்பட்டவை மத்திமம். துவாரமிடும்போது சேதப்பட்டவை அதமம்.

திருமணம் தடைபட்டுக் கொண்டிருப்பவர் பதின்மூன்று முக ருத்ராட்சம் அணிவதால் திருமணம் கைகூடும். ஆயுட்பலம் குறைந்தவர் ஒன்பது முக ருத்ராட்சம் அணிந்தால் ஆயுள் அதிகரிக்கும். கடன்தீர, வறுமை நீங்க ஏழுமுக ருத்ராட்சம் அணிவது மிக நல்லது.

முதன் முதல் ருத்ராட்சம் அணிபவர் அமாவாசை, பௌர்ணமி, உத்திராயண. தட்சிணாயண ஆரம்ப நாட்கள், கிரகண சமயம், விஷு நாட்களில் அணிவது பூரணப் பலனைக் கொடுக்கும்.

நன்றி : காம கோடி

---

## *"ப்ராணியோம் ஸே ஸத்பாவனா[illegible]ஹ்ரா"*

"உயிரினங்களிடம் நல்லெண்ணமே இருக்கட்டும்" என்று இ[illegible] அர்த்தம்.

என்மீது விலங்கு பாய்ந்து விடப்போகிறதே என்ற கவலையில்தான் உ. பி. போலீஸ்காரன் அதன்மேல் தண்டப் பிரயோகம் செய்ய இருந்தான். அந்தச் சமயத்திலும்கூட, வாஸ்தவத்தில் அதைத் தடியால் ஹிம்ஸித்துவிடாமல், தடியை ஆட்டியே விரட்டும்படி ம. பி. போலீஸ்காரன் புத்திமதி கூறி, அவனைத் தடுத்தான். தடியால் ஒரு போடு போட்டிருக்க வேண்டியவன் சட்டென்று அதைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான். மிருகமும் ஓடி விட்டது.

போலீஸ் படையில் இருந்தும்கூட இவ்வளவு அஹிம்ஸா சித்தம் அந்த மத்தியப் பிரதேச போலிஸ்காரனுக்கு இருந்ததென்றால் அதற்கு அவனது ஸ்வயம் பாகம்தான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்று மக்களின் மனம் பல தவறான வழிகளில் சென்றிருப்பதற்குத் தூய்மைக் குறைவான உணவு ஒரு மிக முக்கியமான காரணம். இனிமேலாவது நாம் சீரிய சிந்தனையும் ஸத்வ குண வளர்ச்சியும் பெறும் பொருட்டு ஸாத்விக உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

(ஜெயேந்திர சுவாமிகள்)

## தீர்க்க சுமங்கலி

பெண்கள் பெரியோர்களை நமஸ்கரிக்கும்போது "நீ தீர்க்க சுமங்கலியாக இருப்பாய்!" என்று பெரியோர்கள் ஆசீர்வதிக்கிறார்கள். இதில், உன் கணவன் வெகுகாலம் ஜீவித்திருக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளடங்கி இருக்கிறது. ஆகவே, பெண்ணினுடைய வாழ்க்கை முழுவதும் கணவனுடைய க்ஷேமத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு பெண் செய்யக்கூடிய நல்லது கெட்டதனுடைய பலனெல்லாம் கூட பூரணமாகப் பெண்ணுக்கே உரித்தாகி விடுகிறதில்லை. அது அவர்களது கணவனைத் தான் சேருகிறது. எனவே, பெண்கள் நல்லதை நிறையச் செய்தால், நல்ல ஆசீர்வாதத்தை நிறையப் பெற்றால், கணவன், குடும்பம் எல்லோரும் க்ஷேமமாக இருக்க முடியும்.

சில பெண்கள் பெரியோர்களை நமஸ்கரித்துக் கொண்டு கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள்; "நான் மஞ்சள் குங்குமத்துடன் சாக வேண்டும்" – இதனால் பெண்கள் மஞ்சள் – குங்குமம் தான் இட்டுக் கொள்ள வேண்டும் என்று தெரிகிறது. மஞ்சள் – குங்குமம் என்பது அம்பாளின் நினைவுச் சின்னம். ஆதலால் தற்காலத்தில் உடைக்கு ஏற்றவாறு நெற்றிக்கு இட்டுக் கொள்வது – அல்லது கலர் சாந்தை இட்டுக் கொள்வது அல்லது நெற்றிக்கே இட்டுக் கொள்ளாமல் இருப்பது போன்றவை வருந்தத்தக்கதாய் இருக்கின்றது. மேலும் நெற்றிக்கு இட்டுக் கொள்வதென்பது – சினிமாவில் எப்படி எல்லாம் இட்டுக்கொள்கிறார்களோ, அப்படியெல்லாம் விபூதி – குங்குமம் ஆகியவற்றை மேலும் கீழுமாக இட்டுக் கொள்வது என்பது சரியல்ல. சினிமாவில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பொழுதுபோக்காக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வாழ்க்கைக்கு ஏற்றதாக எண்ணி அமைத்துக் கொள்ளக் கூடாது. *(ஜெயேந்திர சுவாமிகள்)*

# Maha Sivarathri - the holy night of God Siva

**M.K. Sellarajah - J. P. U. M**
President -Thirukoneswaram Temple - Trincomalee

The "Maha Sivarathri" (the holy night of the great God Siva or Iswara) is an important annual lunar festival of the Saivite Hindus which coincides with the newmoon in February. This particular darkest night of the month is dedicated to God Siva whose divine blessings are supposed to extol on those devotees who make offerings and benefaction to the god during the night in the form of "Pooja" anticipating material gain in this world and celestial bliss in the life to come. " Lord Siva" is the third godhead of the Hindu Triad (Thirumoorthi) the other two as the Creator, the Preserver and the Destroyer of the universe and the cosmic forces. However, as Mahadeva, God Siva is acclaimed by the Saivities as an incarnation of Maha Brahama the reputed Creator.

**Parable**

The parabale of the Maha Sivarathri is woven into the fabric of Hindu mythology. It says that one day a hunter, promising to bring his wife a good catch of flesh, went into the wilderness to hunt expecting a good return. As the response was poor, he kept on hunting the whole day wishing to return home before dusk whatever flesh he had managed to collect. Unknowingly, the time passed and as veil of darkness began to cover the wilderness, he made his homeward journey with the little flesh he had with him.

As he could not get of the wilderness in time, and apprehensive of the danger from wildbeasts he thought to spend the night in the jungle and go home the following morning. So he climbed a nearby proliferous tree, kept the flesh on one of the branches, and he himself sat on another branch, wishing to spend the night on the tree. As hours passed, he felt sleepy but the did not sleep fearing he might fall down. However he began to doze and in that dull stupefied state of drowsiness he began to make himself more comfortable by making stationary movements.

As the hunter did so, the branch began to shake, a few leaves fell to the ground. The tree happened to be a "beli" or wood apple (aogle Marmelos) tree, a favourite of the god. The leaves had accidentally fallen upon a sacred "Lingam" of the god that had been placed there by some devout hunters, with a view to propitiate the god in times of calamity or danger. The hunter at top of the tree, was completely unaware that such a thing was happening.

God Siva, having come to know that some one was performing a pooja in the name of the god, surveyed the terrestrial sphere with his divine eye and saw the man seated on the branch of the wood-apple tree. Wishing to do him good, the god made a divine decree that the man, after his death should be brought to "Kailas" (The celestial abode of the god).

After a few years, the hunter died, having accumulated the mortal sin of taking life and was, at once, born in hell to be punished for his sins. The hunter was produced before the Yamaraja (lord of the underworld) and was sentenced to undergo the bloody ordeal in the "Raurava" hell. In the meantime, God Siva saw the unfortunate plight of the hunter and fortwith commanded that the man be released from hell and sent to "Kailas".

**Lingam**

This similitude explains the importance of "Maha Sivarathri" and how a pooja conducted in the name of God Siva, on the particular night, is capable of washing away sins already committed during the course of earthly existence, all Saivite Hindus believe in the divine attributes of God Siva culminating in "Lingam" worship " Lingam" is the "Shakthi" (power) of the god whose manifold manifestations are highly acclaimed by the votaries.

God Şiva is known by many other names as well. Viz, Rudra, Maheswara, Shankara, Mahakala, Nataraja, Trilochana, Neelakanda, Pasupathi, Ugrajeva, Vishvanatha, Neelagriva, Mahendra, Jegadram, Kalarjara, Gangadhara, Mahayogi etc.

The worship of the "Siva Lingam" by Saivite Hindus is done with great faith and devotion. The three principal "Kovils" (Hindu temples or devales) dedicated to the god in Sri Lanka are the Munneswaram Kovil in Chilaw, the Koneswaram Kovil in Trincomalee and the Thiruketheswarm Kovil in the North, Mannar. The Siva Devale No. 2 (Vanvan Madhavi Iswaran Kovil) in Polonnaruwa stands testimony to the Prevalence of Hinduism during the Polonnaruwa period (1088-1231).

The worship of the phallus used in fertility rituals was in vogue among the ancient Greeks, the people of the Asia Minor, among the Saivite Hindus, and many others, in various parts of the world, believed in its procreative potenital. Specially young couples who had failed to bring forth children by them seek the help of this very divine power to fulfil their expectations.

The divine vehicle of the God Siva is a white bull and according to the Vogue Purana, it is an offspring born of Rishi Kasyapa to Woman Surabhi. Accordingly all cattle is held with reverence by the Hindus and cutting beef is taboo to them.

There is a belief that during the "Iswara Vinsathiya" (the 20 year period attributed to God Siva) beef cutting brings the wrath of the god resulting in untold misery to the consumers and the slaughters at large. The sacred bull is known as "Nandhi".

The votaries of God Siva have a profound faith in the divinty and consider that the festival of the "Maha Sivarathri" should be conducted to apease the god in such manner so that they could invoke the blessings of the god to achieve their mundane objectives.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பெண்ணின் பெருமை

உலகத்தில் எந்த நாட்டிலுமில்லாத பெரும் மதிப்பு இந்த நாட்டிலே பெண்களுக்குண்டு. குழந்தைப் பருவத்திலே – ஒரு வயது முதல் – பெண்களை அம்பாளாகப் பாவித்து, நவராத்திரி சமயத்தில் பூஜை செய்யும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மணமான பிறகு தம்பதிகளையே வைத்து, உமா மஹேஸ்வரராகப் பாவித்து, தம்பதி பூஜை செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது.

சுமங்கலிகளைத் திரிபுர சுந்தரி வடிவமாகப் பாவித்து பூஜை செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தாயையே தெய்வமாகவும் நினைக்கும்படி சொல்லியிருக்கிறது.

இவ்வளவு புனிதத்துவம் பெண்களுக்கு எந்த நாட்டிலும், எந்த மதத்திலும் கொடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் இரண்டு உள்ளங்கைகளையும் உரசிப் பார்த்துவிட்டு, உள்ளங்கை நுனிப் பாகத்தில் பொருளாதாரத்திற்கு அதிதேவதையான லக்ஷ்மி தேவியான சக்தியையும், உள்ளங்கை மத்தியில் கல்விக்கு அதிபதியான சரஸ்வதி சக்தியையும், உள்ளங்கை அடிப்பாகத்தில் துன்பங்களையெல்லாம் அகற்றி, இன்பத்தை – மோக்ஷத்தை – அளிக்கக்கூடிய பார்வதி தேவியான சக்தியையும், நினைத்துப் பார்ப்பதென்பது பழங்காலத்திலிருந்து வரக்கூடிய ஒரு முறை. பிறகு நித்திய கன்னிகைகளான – புனிதமானவர்களான – புண்ய ஸ்திரீகளான – அகல்யா, திரௌபதி, சீதா, தாரா, மண்டோதரி போன்றவர்களை மனதிலே நினைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி நினைத்துக் கொள்வதனால், நம்முடைய வாழ்க்கையிலே சம்பவிக்கக்கூடிய மாபெரும் பாபங்கள் கூட அழிந்து விடுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம் நாட்டில் கல்யாணம் முடிந்தவுடன் மங்களப்பாட்டுப் பாடும் போது, "கௌரி கல்யாணம் வைபோகமே– சீதா கல்யாணம் வைபோகமே – ராதா கல்யாணம் வைபோகமே" என்று வைபோகம் பாடுவார்கள். இதனால் பெண்கள் தன் வாழ்க்கையில் கௌரியைப்போல தன்னையே தன் கணவனுக்காக அர்ப்பணம் செய்து கொள்ள வேண்டுமென்பதையும், சீதையைப் போல் தர்மத்தின் அடிப்படையின் கீழ் நிழல்போல் கணவனுடன் தொடர்ந்து இருக்கவேண்டுமென்பதையும், ராதையைப் போல் பக்தியையும் அன்பையும் தம்முடைய கணவரிடமும் குடும்பத்திலும் வைக்க வேண்டுமென்பதையும் "வைபோகமே" பாட்டு நமக்கு நினைவூட்டுகிறது.

(ஜெயேந்திர சுவாமிகள்)

---

## காந்திஜியின் உபதேசம்

கோயிலுக்கு சென்று, தேங்காய் உடைப்பதோ, கற்பூரம் கொளுத்துவதோ ஒரு நாளும் கடவுள் தொண்டாகாது. ஒவ்வொரு உயிரும் ஈசுவர ஸ்வரூபமாதலால் உயிர்களுக்குத் தொண்டு செய்வதே கடவுள் தொண்டாகும். தேசப் பணியே தெய்வப் பணியாகும். ஒருவர் கோயிலுக்குச் சென்று தேங்காய் உடைத்துவிட்டு வெளியே வருகையில், ஏழை யொருவன் தனது இரு கைகளையும் நீட்டிக் கேட்கையில், தங்கள் கையிலுள்ள தேங்காய்த் துண்டில் சிறிதளவும் கொடுக்க மறுக்கும் பேர்வழிகள் கோயிலுக்குச் செல்வதால் யாது பயன்? கோயிலுக்குச் சென்று கல்லில் முட்டிக் கொள்பவர்கள் உலகில் நடமாடும் கோயில்களாகிய ஒவ்வொரு உயிருக்கும் ஏன் தொண்டு செய்யக் கூடாது?.

# தென்கிழக்கின் திருக்கோயில்

த. மனோகரன்

இலங்கையில் பல்லாயிரம் ஆண்டுகளாக முருக வழிபாடு சிறப்பாகப் பேணப்பட்டு வருவதற்குச் சான்றுகள் பல உள்ளன. வடக்கே செல்வச் சந்நிதி முதல் தெற்கே கதிர்காமம் வரையான இலங்கையின் கிழக்குப் பகுதி முருக வழிபாட்டின் முக்கிய பகுதியாக அன்றும் விளங்கியது. இன்றும் விளங்குகின்றது.

கிழக்குப் பகுதியில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முருக வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. முருகனைத் தமிழ்த் தெய்வம் என்போம் நாம். முருகனுக்கு நாமங்கள் பல. முருகன், வேலன், வேலாயுதன், சுப்பிரமணியன், கந்தன் இப்படி இன்னும் பல பெயர்களால் அழைக்கின்றோம். முருகன் என்றால் அழகன் என்கின்றது செந்தமிழ்.

யாமிருக்கப் பயமேன். அஞ்சேல் என அபயமளிக்கும் வேலவனின் திருவிளையாடல்கள் பல இலங்கையிலும் நடந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆணவத்தால் அறிவிழந்து, தான் தோன்றித் தனமாக நடந்த சூரபத்மனை அழித்து நீதியை நிலைநாட்ட முருகன் எழுந்தருளிய இடமும் இலங்கையின் கிழக்குப் பகுதியே. ஆணவம் அழிய, அதர்மம் அகல, நீதியும், நேர்மையும், சாந்தியும் சமாதானமும் மலர முருகனின் வெளிப்பாடு இலங்கையில் தோன்றியது என்பது புராணக் கூற்று.

கதரகம தெய்யோ என்றும், ஸ்கந்த குமார என்றும் சிங்களப் பெருமக்களும் முருகனை வழிபடுகின்றனர். திருவிழாக்கள், பெருவிழாக்கள் எடுக்கின்றனர். முருக வழிபாடு இலங்கையின் இந்து, பௌத்த மக்கள் மத்தியிலே ஆழமாக வேரூன்றியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள செல்வச் சந்நிதியும், வெருகலிலுள்ள சித்திர வேலாயுத சுவாமி கோயிலும், சித்தாண்டி முருகன் கோயிலும், சின்னக் கதிர்காமம் என்று சொல்லப்படுகின்ற மண்டூர் முருகன் கோயிலும், தாந்தாமலை முருகன் கோயிலும், உகந்தை முருகன் கோயிலும், திருக்கோயிலிலுள்ள ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயிலும், கதிர்காமக் கந்தன் கோயிலும் ஒரு நேர்கோட்டிலமைந்த பழம் பெரும் முருகன் கோயில்கள் என்ற சிறப்பைப் பெறுகின்றன.

இம் முருகன் திருத்தலங்களிலே திருக்கோயில் என்ற ஊரிலே கோயில் கொண்டுள்ள ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமியின் வரலாற்றை நோக்குவோம்.

இலங்கையின் கிழக்குக் கரையிலே இன்றைய வடகிழக்கு மாகாணத்தின் தென் பகுதியிலேயுள்ளது அம்பாறை மாவட்டம். அம்பாறை மாவட்டத்தை இன்று திகாமடுல்ல என்று குறிப்பிடுகின்றனர். அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று தெற்கில் கடல் சார்ந்த தமிழ்க் கிராமம் திருக்கோயில். முருகனின் திருக்கோயில் உள்ளதால் போலும் ஊரையே திருக்கோயில் என்கின்ற பெயரில் அழைக்கின்றனர்.

ஈழத்துத் திருச்செந்தூர் என்றும் திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில் அழைக்கப்படுகின்றது. இலங்கையிலேயே தொல்பொருள், வரலாற்று ஆதாரங்களை 2000 ஆண்டுகளுக்கு மேல் கொண்ட வழிபாட்டுத்தலம் ஒன்று உண்டென்றால் அது திருக்கோயில் ஆகத்தான் இருக்கும்.

வரலாற்றுச் சிறப்பும், அற்புதங்களும் நிறைந்த இக்கோயில் தேசக் கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. முருகப் பெருமானுக்கும், சூரபத்மனுக்கும் இடையில் கடும் போர் நிகழ்ந்த போது முருகனின் வேலிலிருந்து தெறித்த அக்கினிப் பிழம்பு வேலாக வந்து விழுந்த இடம் இத்திருக்கோயில் அமைந்துள்ள இடம் என்று கூறப்படுகின்றது.

வராற்று ரீதியாக நோக்கும் போது கி. மு. 301ம் ஆண்டில் அப் பகுதியை ஆட்சி செய்த மழு என்கின்ற தமிழ் அரசன் திருச்சோழன் என்ற சோழ நாட்டு மன்னனின் ஒத்துழைப்புடன் இக்கோயில் குடமுழுக்கு செய்தான் என்று வரலாறு கூறுகின்றது. அதாவது இன்றைக்கு 2200

ஆண்டுகளுக்கு முன் கும்பாபிஷேகம் கண்ட கோயில் திருக்கோயில் என்பதை அறியலாம். அத்துடன் தென்னிந்தியாவில் இருந்து ஆட்சி செய்த சோழ அரசர்களுக்கும் கிழக்கிலங்கையிலிருந்து ஆட்சி செய்த தமிழரசர்களுக்கும் இருந்த மொழி, சமயத் தொடர்புகளை அறிய முடிகின்றது. 2200 ஆண்டுகளுக்கு முன் கிழக்கிலங்கையில் அரசொன்றிருந்தது, அதன் தொடர்புகள் சோழ நாட்டுடனும் இருந்தது என்ற வரலாற்று நிகழ்வு இதன் மூலம் வெளியாகின்றது. இலங்கையின் கிழக்குப் பகுதியின் மொழி, கலை, பண்பாடுகள், சமய நிலை என்பனவற்றின் பழமையும் இதன் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது

கி. மு. 103ம் ஆண்டில் அதாவது இன்றைக்கு 210 வருடங்களுக்கு முன் சோழ நாட்டு மன்னரொருவர் திருக்கோயிலில் திருப்பணி செய்வித்தார் என்று மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் நோக்கும் போது சோழ அரசர்கள் திருக்கோயிலின் பால் கொண்டிருந்த ஈடுபாடு விளங்குகின்றது.

இப் பெருமை மிகு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலிலுள்ள வேல் வடக்கு முகமாக இருந்து கிழக்கு முகமாகத் திரும்பியதால் திருக்கோயில் என்ற பெயர் ஏற்பட்டதென்று கோயிற் பதிகமொன்று கூறுகின்றது.

இலங்கை வாழ் இந்து சமயத்தவரின் பண்டைப் பெருமை கொண்ட இத்திருத்தலம் உலகிலுள்ள பழம்பெரும் திருத்தலங்கள் வரிசையிலே ஒன்றென்று கொள்ளலாம்.

இக்கோயில் நிருவாக முறை பண்டைய மன்னர்களால் விதிக்கப்பட்ட விதி முறைகளுக்கமையவே இன்றும் விளங்குகின்றது. பண்டைய இந்துக் கோயில் நிருவாக முறையை இன்றும் அறிந்து கொள்ள திருக்கோயில் நிருவகிக்கப்படும் வழிமுறை வகை செய்கின்றது.

கோயில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்தத் திருவிழா ஆடி அமாவாசையன்று தீர்த்தத்துடன் முடிவடைவது வழக்கமாகும். கிழக்கிலங்கையின் தென்பகுதியில் இந்து சமயத்தின் பண்டைய பெருமைக்கு கட்டியம் கூறி நிற்கும் திருக்கோயில் நமது வரலாற்றுச் சின்னமும் ஆகும்.

இத் திருக்கோயிலுக்கு அண்மையிலுள்ள கல்லொன்று விசேடம் பொருந்தியது. எத்தகைய விஷப் பாம்பால் கடியுண்ட வரும் இக்கல்லில் பால் ஊற்றி கடியுண்ட இடத்தைக் கல்லிலே ஒற்றினால் விஷம் முழுமையாக நீங்கி விடும் அற்புதம் நிகழ்கின்றது. பாம்பின் நச்சுதன்மையைப் போக்கும் திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி மனித மனங்களில் ஊற்றெடுக்கும் தீயபகைக்கொடுமை செய்யும் நஞ்சையும் அகற்றி உதவமாட்டாரா என்ற ஏக்கமும் மனத்தில் எழத்தான் செய்கின்றது.

யாமிருக்கப் பயமேன் என்று தஞ்சமடைந் தவர்களுக்கு அடைக்கலமளித்துக் காக்கும் திருக்கோயில் உறை திருமுருகன் திருக்கோயிலை

*செங்கமலத் திருப்பாதம் பதித்த இடம்*
*சீறி வந்த வேல் தரித்து நின்ற இடம்*
*சங்கடங்கள் தீர்த்தருளும் புனித இடம்*
*சங்கரனார் திரு மகனார் உறையும் கோயில்*
*தென்கிழக்குத் திசையிருந்து அருளுமிடம்*
*தென்னாடு கொண்ட சிவன் மைந்தன் இடம்*
*வலு தந்து துடிப் பேற்றும் திவ்விய இடம்*
*வாழ நல்ல வழி காட்டும் குமரன் கோயில்*
*உமையவளின் இளமகனார் உறையுமிடம்*
*உத்தமர்கள் போற்றி நிற்கும் இனிய இடம்*
*இன்னல் களைந்து நலம் நல்கும் கருணை இடம்*
*இறைவன் எம் திருமுருகன் உள்ள கோயில்*
*நல்லவர்கள் நாடி வந்து பணியும் இடம்*
*நலங்கள் பல தந்தெம்மைக் காக்கும் இடம்*
*மறம் களைந்து அறம் நிலவி நிற்கும் இடம்*
*மலர்ப்பாதன் கந்தவேள் அமர்ந்த கோயில்*
*மயிலமர்ந்து மதிதருவோன் உள்ள இடம்*
*மாநிலத்தில் கருணையொளி பாய்ச்சும் இடம்*
*விண்ணவரும் போற்றி நிற்கும் புண்ணிய இடம்*
*வீரவேல் கொண்ட எங்கள் வேலன் கோயில்*
*மழுவரசன் திருப்பணிகள் செய்த இடம்*
*மாசகற்றும் வள்ளி மணாளன் இடம்*
*பண்டு முதல் நிலைத்திருந்து அருளுமிடம்*
*பழம் பெருமை கொள் அழகன் திருக்கோயில்*

என்று பாடி அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைப் பணிவோம்.

**இந்து என்பவன் யார் ?**

**எவன் ஒருவன் "ஈசன் ஒருவன்" என ஏற்றுக் கொள்கிறானோ, உருவ வழிபாட்டினைச் செய்கிறானோ, கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுகிறானோ,** சிவ சின்னங்களை அணிந்து அனுஷ்டானங்களை ஏற்று நடத்துகிறானோ, அவனே "இந்து" என்பவனாவான்.

**(ஜெயேந்திர சுவாமிகள்)**

செய்திக் குறிப்பு

# இரத்மலானை - மொறட்டுவை இந்து மன்றம் அங்குரார்ப்பணம்

இரத்மலானை இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த நவம்பர் மாதம் 20ம் திகதியன்று இரத்மலானை, சொய்சாபுரம் மொறட்டுவை வாழ். இந்துக்கள் பொதுத்தேவைகள் காரணமாக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்கள் தலைமையில் "இரத்மலானை மொறட்டுவை இந்து மன்றத்தின்" அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வருகை தந்திருந்த இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி, அகில இலங்கை இந்து மான்ற செயலாளர் திரு. க. நீலகண்டன், கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ், இரத்மலானை இந்துக்கல்லூரி அதிபர் திரு. ந. மன்மதராஜன், இந்துசமயகலாச்சார திணைக்களப் பணிப்பாளர் திரு. சி. தில்லைநடராஜா ஆகிய பெருமக்கள் ஆசியுரைகள் வழங்கி மன்றப்பணி சிறக்க வாழ்த்தினார்கள்.

இரத்மலானை – மொறட்டுவை இந்து மன்றத்திற்குத் தலைவராக வட கிழக்கு மாகாண காணி, நீர்ப்பாசன, விவசாய அமைச்சின் செயலாளர் திரு. சி. த. மார்க்கண்டு அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திரு. வி. கயிலாசபிள்ளை (தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)<br>சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜ்(இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கிளை தலைவர்)<br>திரு. சி. தில்லைநடராசா (பணிப்பாளர், இந்து சமய கலாச்சாரத் திணைக்களம்)<br>திரு. க. நீலகண்டன் (அ. இ. இ. மாமன்றப் பொதுச்செயலாளர், இந்து வித்தியாவிருத்திச் சங்கச் செயலாளர்) |
| உப தலைவர்கள் | : | திரு. ந. மன்மதராஜன் (அதிபர் இரத்மலானை இந்துக்கல்லூரி)<br>திரு. ஆ. தில்லைநாதன் |
| செயலாளர் | : | திரு. த. செ. நடராசா |
| துணைச் செயலாளர் | : | திரு. க. மகாலிங்கம் |
| பொருளாளர் | : | திரு. செ. குமாரசாமி |
| துணைப் பொருளாளர் | : | திரு. ம. சர்வானந்தா |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | திருவாளர்கள். V. S. கணேசலிங்கம், V. ஆறுமுகம், S. மகாதேவராஜா,<br>K. விஷ்ணானந்தமூர்த்தி, K. இராமலிங்கம் |

கூட்டத்திற்கு வருகை தந்திருந்த ஏனைய இரத்மலானை, சொய்சாபுரம், மொறட்டுவையில் வசிப்பவர்கள் தங்களை சங்கத்தின் அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொண்டனர்.

கல்லூரி அதிபர் அவர்கள் கல்லூரி வளவுக்குள் கட்டப்பட்டு வரும் விநாயகர் ஆலயம் பொதுமக்கள் வழிபாட்டுக்குமாகக் கட்டப்படுகின்றது என்றும், வருகிற தைப்பூசத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதாகவும் தெரிவித்தார். இக்கல்லூரி வளர்ச்சிக்கு மன்றத்தின் ஒத்துழைப்பு உதவியையும் கோரினார்.

புதிய சங்கம் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி ஒத்தாசை புரியவும், இப்பகுதியில் உள்ள இந்துக்களின் நலன்களைக் கவனிக்கவும், தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி, கலாச்சார மேம்பாட்டைக்கவனித்து ஆக வேண்டிய செயல்திட்டங்களை வகுத்து உரியவர்களின் வழிகாட்டல், உதவி, ஒத்துழைப்புடன் முயன்று இயலுமான அளவு நிறைவேற்ற முன் வந்துள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்,
இரத்மலானை - மொறட்டுவை இந்து மன்றம்,
M1/9, சொய்சாபுர தொடர்மாடி, மொறட்டுவை.


**GLORIES OF SHAIVAISM**
By: Mr. S. Sivapathasundaranar
The first edition of Glories of Shaivaism published by Saivaprakasa press, Jaffna in 1955 has been reprinted by All Ceylon Hindu Congress and has been released
The price of a Copy is Rs. 30/= Only
(Postage Rs. 5/= Per. Copy)


## இணை உறுப்பினர்

இந்துப் பெருமக்கள் அனைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் இணை உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.
இணை உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளுவதற்கான கட்டணம் ரூபா 150/= இணை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.
இதற்கான விண்ணப்பப் படிவங்களை மாமன்றத் தலைமையகத்திலிருந்து நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

*Continuation of the article on page 25 of Theepam 3 Sudar 1*

# FROM KAILÃSA TO KATARAGAMA:

## MYSTICAL PASSAGE VIA THE AXIS MUNDI

Like his 'father' Rudra or Siva, Skanda-Murukan is a god associated with mountains and hilltops; his Wanniyala-aeto worshippers even today know him as Kande Yakã, the hunter Spirit of the Mountain. Vedahitikanda, 'The Peak Where He Was' in Kataragama, to Tamils is Katira Malai, the 'Mountain of Light' and even to this day the Kataragama Pada Yãtrã is also known in Tamil as Katira Malai Karai Yãttirai, the 'coastal pilgrimage to the Shining Peak.' In view of its strong associations with the god's orgin on Mount Kailãsa, it is also well known as Daksina Kailãsa, the 'Southern Kailãsa.'

This postulation of a virtual North-South axis anchored at Uttara Kailãsa in Tibet and Daksina Kailãsa in Sri Lanka also has implications for the theory and practice of pilgrimage in the tradition of Kataragama. For it is a remarkable fact that Mt. Kailãsa in the trans-Himãlaya and Kataragama in the far south indeed constitute a virtual North-South axis not only in yogic lire, but also in modern geographical terms as well (see figure 2). Kataragama (at 81 20' East longitude) lies a scant ten minutes of arc east of Kailãsa (at 81 20 East longitude) far to the north in the Transhimalaya.

This striking feature of a virtual North-South axis or geographic alignment between Kailãsa and Kataragama is well known to swãmis and yogins, who regard it as a macrocosmic analog to the microcosmic susumna nadi or subtle central nerve channel envisaged in kundalini yoga. In their view, Kailãsa is homologized or equated to the thousand-petalled sahasrara cakra, the goal of yogic practice, while Kataragama corresponds to the mulãdhãra cakra, the point of entry for the vertical flight to higher cakras or lokas, subtle worlds superior to our world of physical sense perception. By process of transposition, the North-South axis geographically represented by Kailãsa-Kataragama is also analogous to the vertical ray that 'shines upon the waters' in religious traditions worldwide. In this sense, the descent of Skanda-Murukan from Uttara Kailãsa to Daksina Kailãsa also represents the descent or visitation of the Spirit into matter, which expresses in metaphysical terms precisely the legend of Skanda-Murukan's disguised visitation to Kataragama to woo and wed the yearning human soul represented by Valli. In this context, the Kailãsa-Kataragama axis is also homologized to the shrine's very name Katir-Kamam, where lofty cold Mt. Kailãsa symbolizes Katir (effulgence, light or brilliance, i.e. logos) while Kãmam (Sanskrit: Kãma or Greek eros) pertains to the passion of Valli and Murukan in the romantic jungle setting of Kataragama which, although undoubtedly a very human love story, is also a subtle and profound religious parable at the same time it is on this level that scholars and devotees interpret it.

By the same token, Skanda's 'descent' due south has resonances pertaining to the qualities or associations of the direction South in pan-Indian cosmographical conception. South is the quarter presided over by Yama, the Judge of the Dead and Dispenser of Justice. South is the direction of chaos and death, represented by the restless and desolate Indian Ocean. By actually going the full distance in the very direction in which his father Siva merely faces (as Daksinamúti, the 'Southward-facing,' Skanda-Murukan not only associates himself with the people of the South, i.e. Tamils, but demonstrates that he is a god of action and fulfillment here in this world, specifically in South Asia. Murukan symbolically descends the axis mundi first from heaven to Kailãsa and then from Kailãsa to Kataragama, the sakti pítha or 'seat of mystic power' par excellence where the hunter god is attracted and caught, as it were, by Valli Amma, the god's icchã sakti (Sanskrit: 'power of desire') and personification of Kataragama's mystic power.

Scholars of religion, too are familiar with this process- in their own scholarly way of course, if not directly and immediately as a result of actually undertaking the journey or passage as the traditions under their study may practise it. Mircea Eliade was perhaps the first modern scholar to articulate this process.[12] In the context of Indian tantricism, anthropologist Agehananda Bharati describes the process as follows: "The most characteristic phenomenon of tantric pilgrimage, both as a concept and as a set of observances, is the hypostasization of pilgrim-sites and shrines: the geographical site is homologized with some entity in the esoteric discipline, usually with a region or an 'organ' in the mystical body of the tantric devotee."[13]

These structural features of Kataragama and its legends - which have not passed unnoticed by generations of practising Kaumãra sãdhakas or aspirants - are also related to Kataragama's hoary tradition of passage to and from other lokas or worlds as well as the appearance

in Kataragama of diverse spirits and godlings from other lokas. The Kataragama festival, for example, is essentially a wedding or fertility celebration which, in theory, is widely attended not only by humans but also by spirits of every hue and variety from many lokas and not just from our familiar sense world alone. Senior swamis and yogins allege that strange beings used to visit Kataragama in human or animal guise quite commonly until only a few decades ago. Such visitations have become less common, they say, due to the increasing secularization of Kataragama. As outlandish as such claims might sound at first, they should not be discarded but should be considered in the light of traditional sciences which best explain these alleged occurences on their own terms.

## INTERTWINED REALMS OR WORLDS

Certain places on earth are believed to exude mystical power or sakti partly because they are felt to be in continous contact with their subtle counterparts in other worlds. That is, their connection with myth is sustained not so much because of a persumed historical relationship ('so-and-so came here and did such-and-such') but because the very place itself remains connected through living myths or legends that happen in principio, i.e. not at a unique unrepeatable moment in past history, but always in the eternal here-and-now (Tamil: ippó-inge).

An example of this concept concerns the Kataragama Mahãdévãlé on the left bank of the Menik Ganga where the god is believed to reside and around which the mystery tradition revolves. The Mahãdévãlé is a modest, single-story temple of indeterminate age said to have been orginally built by the 2nd century BC Sinhala King Duttugemunu on the direct order of god Kataragama. But according to current lore, when practitioners visit the Mahãdévãlé which in a state of yogic or lucid dreaming, they find that it has not one story but seven - three stories above ground and three more below in addition to the ground floor. In this sense, the god's temple-palace encompasses multiple lokas and is microcosm of the hierachical cosmos described in pan-Indian tradition. In recent years lucid dreaming has become the object of recognised medical research worldwide, so perhaps dream researchers may some day be able to duplicate (or disprove) the findings of Kataragama's indigenous tradition of yogic dreaming.

## VOWS AND THE POWER OF TRUE UTTERANCES

In Kaumãra tradition, vows (Tamil: nértti) and vow-fulfillment (nérttikatan) play important and even critical roles. Indeed, Valli's vow that she would marry no man but only the great god himself forms the core of the Katasragama legend and is common to the South Indian recension as well. In Sinhala folkore Kataragama Deviyo himself vows that he will remain in Kataragama always to help and protect his devotees. Murukan devotees routinely make vows to perform difficult and/or sacred acts in return for the god's arul or grace in meeting life's challenges. Both in India and in Sri Lanka this takes the form of a personal promise: in return for a (usually) specific favour from a god or spirit, devotees promise to reciprocate with specific acts of penance, devotion or sacrifice.

Of course, the idea of undertaking a contract or covenant with an unseen god is not peculiar to the Indian subcontinent alone but is an honored tradition even in Semitic religions. Indeed, all over the world from remote times people individually or collectively have undertaken formal commitments or vows or covenants with unseen gods or spirits. Everywhere the practice is felt to confirm and re-establish the relationship between the human and spiritual realms by giving the force of truth to utterances and ritual acts associated with them.

In the Kataragama Pãda Yãtrã tradition too, vows play a fundamental role. The Kataragama Asala festival season officially begins forty-five days before the festival itself with the kap hitavíma rite at the Kataragama Mahãdévãlé when Kapurãla priests go to an undisclosed location in the god's forest where they cut two tree saplings yielding milky sap and ritually 'plant' them in the public forecourt of the Mahãdévãlé. By this ritual act the Kapurãlas express an unuttered vow (anirukta vrata) that they will perform the elborate Asala festival starting forty-five days later.

On the very day that the kapurãlas are performing the kap hitavima rite, far to the north the Pãda Yatra pilgrims have assembled at the great Vattãpalai Kannaki Amman festival near Mullaittivu. Here the pilgrims make their private pledge or promise to do something which may be hard to do or else to abstain from certain habitual ego-gratifying activities, usually for the course of the pilgrimage. This may mean walking bare foot to Kataragam for some, or obstanding from smoking for the duration of the pilgrimage for others. Both are instances of 'self-naughting' or akincana, one of the cornerstones of spiritual practice.

## DISGUISE AND CHANGE OF IDENTITY

Closely related to the theme of movement between lokas or spheres is the element of shifting identity. As

Bryan Pfaffenberger observes, "Pilgrimage.... requires the submission.... if not the annihilation.... of day-to-day identities, and emphasizes the shared experiences of the pilgrims rather than the differences among them."[14] In the Kataragama tradition, this shift is a critical but gradual one that progresses over the weeks of each pilgrimage and years of repeated practice.

This process is also related to the archaic theme of divinity or majesty moving about in disguise, which is not restricted to Sri Lanka or India alone but was long common throughout the ancient world. Even today, it is recalled in the exceptional hospitality bordering upon reverence that persists in traditional oriental cultures toward guests of distant or uncertain origin, as recalled in the Sanskirit injunction atithih devo bhava: 'Regard the sudden visitor as a divinity.' In particular, the practice of traditional hospitality towards pilgrims and strangers in the form of annathanam (Sanskrit: annadãna 'offerings of food') is still alive in rural Sri Lanka and has played a key role in sustaining archaic traditions like the Kataragama Pada Yatra. Notably, the mainly - Tamil pilgrims are received on a grand scale not only in Tamil villages but also in Sinhalese villages.

To this day, whether a pilgrim is a Hindu swãmi (Sanskrit: 'lord or free man') or a Muslim faqir (Arabic: poor man'), he (or she) carries on an inherited tradition or parampara of divine majesty cloaked in outward poverty and simplicity. Similarly, the equivalent Tamil term anti also encompasses both paradoxical senses of lordship and poverty; the term is especially characteristic of Skanda-Murukan and the initiates of his cult.

In the mythos of Kataragama, Skanda-Murukan does not display his divine nature openly from the start but approaches Valli Amma and her relatives in a series of disguises. Kataragama-Skanda in particular is regarded by his Tamil devotees as Kantali, God as the Supreme Identity, i.e. formless. Therefore whatever form or 'face' the god chooses to show is only a guise. In Tamil literary and oral traditions, Murukan appears to Valli first as a handsome young Vetan hunter in a brazen bid to tempt her to violate her vow, as it were. When this bid fails (but succeeds in the sense of testing her vow), he tries other disguises and finally wins the trust of Valli and her clan by appearing in the pitable guise of an old hunchback 'holy man.' Because of his use of cunning and disguise to get near to Valli and elope with the girl even when she is closely guarded by her clan, the Kataragama god is widely regarded as a wily rogue and a 'thief,' albeit a beneficent and honorable one. Interestingly, this notion of the beneficent solar deity Skanda being a rogue is traceable to as ancient a canonical text as the Atharva Veda, wherein a section called the Skandayaga is also known as the Dhurtakalpa or 'Rogue Ordinance.'15

In the Kataragama Pãda Yãtrã tradition also, initiates essentially follow in the footsteps of their roguish god and his followers before them. Leaving behind their normal identities in the villages from which they come, these 'ordinary villagers' become eccentric swamis and Swami ammas-trusted counselors, teachers and healers, whose reputation waxes with the number of pada yatras undertaken and the distance they have travelled from their home village. Of course, this also raise suspicions about the; real' character of the pilgrims, who as 'messengers' of the god are expected to remain (atleast temporarily) celibate, vegetarian and high-minded. Of course, many fall short of the ideal. What is significant is that an age-old Dionysian tradition of a wily fertility divinity coming in disguise still survives, if only in Sri Lanka since these elements are hardly evident in South India. Not surprisingly, the theatrical element (often as pantomime) too survives in association with these standard elements of disguise and protean identity. This again is entirely in keeping with the character of a deity who relates to humanity through play-like activities which fully deserve the appellation 'mysteries'.

## REVERSAL OF TIME AND CAUSATION

Mystical traditions worldwide allude to the desirability of remaining in, or returning to, the state of childlike wonder and innocence. But in kaumãra sãdhanã in particular, the quest has special resonances with a god who since remote antiquity has been invoked primarily by names (Murukan, Sanatkumãra, etc.) implying perpetual youth. Kaumãra sadhakas undertake a deliberate course of practices that aim to reverse the course of mental and physical aging.. in effect, reversing the course of the Ganges' and turning the irresistible flow of time and causation backwards towards its origin in principio. This in part explains what appears to the non-participant observer to be backward or tospy turvy logic that characterize many 'impractical' cult practices such as walking great distances when cheap transport is easily available. Hence, too, the natural affinity of works like Alice in Wonderland to the practice and exegesis of Kaumãra traditions.

In the context of Kataragama Pada Yatra, time reversal is evident to discerning pilgrims not only inwardly but even outwardly as well. The pilgrimage

customarily begins from one's own doorstep or wherever one happens to be when one gets an irresistible 'call' to attend the Kataragama festival as testified to this researcher by many Tamil, Sinhalese and Muslim pilgrims. It therefore begins for most pilgrims from relatively developed and ordered communities within the frame work of contemporary Sri Lankan society. But as the pilgrims move southward, they progressively leave small urban centers behind; the towns and villages get smaller and farther apart until they pass the last small village of Panama, after which they must cross nearly a hundred kilometers of uninhabited jungle---- Yala National Park and environs. In effect, the pilgrims are moving backwards in time from the twentieth century to a prehistoric era until finally at Kataragama-- prepared by 'real' Kataragama in its identity as a mythical cult center, entirely above and beyond time, causation and history.

## THE NARROW GATE: PILGRIMAGE AND THE PASSAGE TO THE OTHERWORLD

Storytelling traditions Kataragama speak of secret or hidden passageways leading to and from other lōkas or realms. Typically the tradition speaks of passages that lead underground, rather like Alice when she tumbles into an enchanted rabbit hole. One may, for instance, consciosly or unconsciously cross a threshold where one suddenly finds oneself in another loka or at some sacred distant site in Sri Lanka like Adam's Peak. While the possibility of discovering such gateways cannot be discounted entirely, the passage referred to is allegorical in character yet intensely real to one who undertakes the journey. With help from experienced wayfarers, the seeker studies the surface contour of his or her own immediate realm of ideation and perception. At moments of insight, habitual patterns of ideation and perception cease and older (yet fresh and new) modes of ideation present themselves. When this happens, the sãdhaka percieves the world in strange and magical new ways, at first only only as momentary glimpses but later as a sustained vision that co-exists side-by-side with the conventional secular view of the world. When two or more sãdhakas gather-- as during Pãda Yãtrã.. they typically converse in sandhã bhãsã, 'intentional language' which supports references to both worlds and therefore sounds like ordinary or even profane discourse to outsiders.

According to Ananda Coomaraswamy, the essential story of the passage to the otherworld between ;Clashing Rocks' is replete with the "signs and symbols of the Quest of Life have so often survived in oral tradition, long after they have been rationalized or romanticized by literary artists." "The distribution of the motif," he adds, "is an indication of its prehistoric antiquity."[16] The Kataragama Pãda Yãtrã, too, consists of folk tradition practices and legends which suggest that, although preserved and transmitted by generations of simple villagers, it was originally undertaken and its possibilities developed by religious specialists of considerable doctrinal sophistication. The 'folk' character of the Kataragama Pãda Yãtrã tradition, therefore, properly refers only to the custodians who have preserved it.

## KATARAGAMA PÃDÃ YÃTRÃ PRESENT AND FUTURE

Who are the Pãda yãtrã pilgrimas? As a proportion of the Tamil Hindu population, they are a small minority. After a decade in eclipse, the Pãda Yãtrã today includes a high proportion (nearly half) of novices. Yet many pilgrims have walked not once but repeatedly, although the practice takes weeks or even months to perform, depending upon from where one starts. Many senior pilgrims report that they first walked in their youth or even childhood in the company of family members. A case in point is that of Mrs. P. Maheswary of Trincomalee, who first walked with her family as a teenager in the 1950's. Bebi Amma (as she is now known) has since walked thirty-seven times from Jaffna or the farthest starting point from Kataragama (currently Trincomalee).

When this researcher first walked with the Pada Yãtrã pilgrims in 1972 in Bebi Amma's party, she was already a seasoned veteran. Today she is the most senior pilgrims (seniority is reckoned not by age but by the number of pãda yãtrã ). As such, despite her gender, Bebi Amma has inherited the role of Vél Swãmi, the ritual bearer of the vél or spear emblem of Skanda-Murukan and group leader who decides (or confirms group decisions) upon such issues as the route (critical in dense jungle where even experienced pilgrims may easily get lost), where to halt and when to start, etc. The previous Vél Swãmi, Muttukumãr Vél Swãmi of Kilinochi, had walked from Jaffna in excess of fifty times since the late 1930's, possibly an all-time record. In times of peace, the pilgrims used to walk in small Kuttankal (parties) consisting of as many as thirty (the maximum capacity rice pot that one adult can carry). But nowadays for reasons of security a Kuttam may consist of up to 170 adults and children, an unwieldy size considering that the party is but a loose, temporary organisation-and yet life-critical decisions must be made and executed daily, often in remote dry jungle.

The total number of pilgrims is also difficult to ascertain, since pilgrims walk of their own accord whenever and by whatever route they please and only recently have Sri Lankan security officials begun to try to register the foot pilgrims as they arrive out out of the Yala National Park to attend the Kataragama festival. Hausherr cites a rough figure of 1300 Pada Yatra pilgrims from Jaffna district alone in his study in the 1970's which tallies with estimates this researcher heard elsewhere in the early 70's[17] Following the anti-Tamil riots of 1983, for years it was not safe for Tamils to walk openly through Sinhala areas, and since 1990 they have not been able to walk from points north of Trincomalee. But with the founding of the Kataragama Devotees Trust in 1988 with the explicit objective of reviving the Pãda Yãtrã and other Kataragama traditions, the number of pilgrims has begun to return to earlier levels, if only in Sri Lanka's eastern districts. The great majority of foot pilgrims walk from Batticaloa and Ampara districts, which are much closer to Kataragama than Trincomalee, Vavuniya or Jaffna districts where only the most ardent devotees are prepared to walk for forty days or more. Some villages in Ampara district are less than a week's walk from Kataragama, such that farmers can afford to leave their fields for a short time and return within ten days or two weeks at most, which villgers in more distant districts can ill afford to undertake.

Significantly, the Kataragama Pãda Yãtrã attracts one or two Western pilgrims each year as well as a few Sinhalese devotees despite the elements of risk and hardship involved. Indeed, it would be wrong to characterize the Kataragama Pãda Yãtrã solely as a Tamil Hindu tradition, although Tamils have long been considered as the its custodians and have long been predominant numerically as well. The survival of this ancient yet vigorous tradition despite all the challenges posed by Sri Lanka's changing society suggests that it may continue to flourish in spite of rapidly changing social conditions. While its precice impact upon Sri Lankan society in return has never been studied, the tradition has undoubtedly helped in establishing inter-ethnic harmony and respect in years past and could play an important future role in healing the wounds of long years of ethnic strife.

Despite the shroud of secrecy surrounding the ancient Kataragama god's cult, nevertheless there are certain injunctions or guidelines based upon longstanding tradition which are common knowledge to experienced pilgrims. Important ones pertaining to the Kataragama Pãda Yãtrã may be summarized as follows:

1. Be alert to the Spirit's inner and outer messages. If the 'call' comes, heed it.
2. Do not announce your destination or starting time. Upsets may occur.
3. Maintain a low profile. Learn from others who know more than you know.
4. Increase the faith all around for self and others. Or else remain at home.
5. Keep your promises few and simple, but keep them. Penalties can accrue.
6. Sleep out of doors at night or in temples, but not in private homes. Taste the homeless life fully and enjoy it while you can.
7. Accept whatever comes. Blessings may appear in disguise.
8. Share whatever comes; accept the alms friendship and wisdom of others.
9. Do not [illegible] your personal grievances upon others while en route. Deliver all complaints to Kataragama and register them there personally.
10. Trust in the Spirit and make it your constant guide. Beware of imitations.

In summary, an age-old Sri Lankan mystical tradition closely associated with archaic concepts of sacred geography still survives among simple and doctrinally unsophisticated villagers whose inherited practices may be characterized as raw bhakti or devotion, yet who are aware of many elements of the profound doctrine upon which their practices and beliefs are based. Seen in this light, it should be clear that Kataragama and its associated pãda yãtrã traditions preserve many features of great antiquity that deserve to be appreciated on their own terms, including elements of an archane traditional science of cosmography or sacred geography which have long escaped the attention of outside observers. As such, this study should be regarded only as an initiasl survey of a subject to be examined appropriately and in the greater depth that it richly deserves.

---

**கண் விழிப்பதால் உண்டாகும் நன்மைகள் :**

ஏகாதசி தினம் உபவாசம் இருந்து அன்று இரவு உறங்காமல் விழித்திருக்க வேண்டும் என்று தர்மசாஸ்திரம் கூறுகிறது. உணவருந்தாமல் இருக்கும்போது இயற்கையாகவே தேக உஷ்ணம் அதிகரிக்கும். இரவு முழுவதும் விழித்திருக்கும்போது மிக அதிகளவு உடல் வெப்பம் அதிகரிக்கும். இதனால் நாம் தினமும் உட்கொள்ளும் ஆகாரம், நீர், காற்று இவைகளின் மூலம் உடலில் சேரும் நுண்ணிய நோய்க் கிருமிகள் (Virus & Bacteria) அழிந்து சரீரம் புடம் போட்ட தங்கம் போல் சுத்தமாகிறது.

- ஸ்ரீ யோகி சிவானந்தா



# சிற்சபேசன்



சிதம்பரத்தை நினைத்தால் உள்ளம் சிலிர்க்கிறது. தத்துவ வடிவான அந்தச் சிற்பச் செல்வம் எதிரே நிற்கிறது. அதிற் பரவெளி தோன்றுகிறது, சிற்சபை விளங்குகிறது ! அங்கே ஞானநடம் புரியும் சிற்சபேசன், நடராஜப் பெருமான் திருவுரு, நமது உள்ளத்தில் நடம் புரிகிறது. அருவும், உருவும், அருவுருவுமான மூன்று தன்மையிலும் நாம் இறைவனை அங்கே நினைக்கிறோம், துதிக்கிறோம், காண்கிறோம் !

பொது நடத் தந்தையின் முன்னிலையில் நின்றால், ஆ !...... எத்தனை இன்பச் சிந்தனைகள் உள்ளத்தில் வெள்ளம் போலப் பொங்குகின்றன ! நமது தமிழும், நந் தமிழ்ப் பெரியார் பெருமையும், நமது தமிழ் மறையின் சிறப்பும், நம்முன் கதிரோங்கி விளங்குகின்றன ! பதஞ்சலி, வியாக்கிர பாதர், திருவுடை அந்தணர், உபமன்யு, வியாசர், சுகர், சௌனகர், சூதர் முதலிய முனிவர் கூட்டம் நம்மைச் சுற்றி நிற்பது போல் உணர்கிறோம்; திருமூலர், திருநீலகண்டர், நந்தனார், சேக்கிழார் முதலிய தெய்வப் புலவரின் அன்புக் கனலில் மூழ்குவது போல் உணர்கிறோம்; ஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் பாடிய தேவாரத் திருமறைகள் நம்மைச் சுற்றி ஒலிக்கும் போது.... ஆ ! அந்த இன்பத்தைச் சொல்ல வாயுரை யுண்டோ? பொன்னம்பலக் கிழவராக வந்து, தமிழ்த் திருவாசகத்தை ஆர்வமுடன் எழுதிய அருளப்பனை நினைக்கிறோம். தமிழ்பாசுரத்தில் அவனுக்கிருக்கு ஆர்வந்தான் என்னே!

அத்தகைய ஆர்வம், இன்று நம் தமிழரைப் பற்றாதா என்று வேண்டுகிறோம். பொன்னம்பலப் படியில் சிவபிரானே வைத்த திருவாசகத்திற்கு "இதுதான் பொருள்" என்று சோதியாய் அவனுள்ளே மறைந்த மாணிக்கவாசகரின் பதியன்பை யுன்னி நம் உள்ளம் கரைகிறது.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே!"

என்று நம்மை அறியாமற்பாடுகிறோம்!

சிதம்பர இரகசியத்தை நன்றாக அறிவோமானால் நமது உடலமே திருக்கோயிலாகும்; உள்ளமே சிற்சபையாகும்; இறைவனே, அங்கே திருவடி தூக்கி நடமாடுவான்; அவனது துரியானந்தத் தாண்டவத்தை அருள்விழியால் உணர்வோம்; ஆறுகளெல்லாம் கடலையே நோக்குமாறு போல, உலகிலுள்ள ஆன்மாக்களெல்லாம், சமயங்களெல்லாம், ஒரே அருளிறைவனை நோக்கிச் செல்லக் காண்போம்; 'சாதிசமய வேறுபாடுகளெல்லாம் மாந்தர் மதிமயக்கம்; இறைவன் ஒருவன்; உயிர்கள் அவனது திருமேனி' என்று காண்போம்: பொதுநடத் தந்தையாகிய அருளிறைவன், சுத்த சமரச சன்மார்க்க நித்திய வடிவாகக் காட்சியளிக்கிறான். உலகெலாம் ஓதியுணர்ந்து வழிபடத்தக்க ஒருவன் எம் அருளப்பன். நம் செந்தமிழ்ச்சிற்பிகள் அப்பனுக்கு எவ்வளவு அழகான வடிவமைத் திருக்கின்றனர் அஃதோர் ஓவியக் காவியமே! அதைக் கண்டதும்,

*"பேதமுறா மெய்ப்போத வடிவ மாகிப்*
*பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்*
*சீதமிகுந் தருள்கனிந்து கனிந்துமாறாச்*
*சின்மயமாய் நின்மலமே மணந்து, நீங்கா*
*ஆதரவோ டியல்மௌனச் சுவைமேற் கொண்டு*
*ஆனந்த ரசமொழுகி யன்பா லென்றும்*
*சேதமுறா தறிஞருளத் தித்தித் தோங்குஞ்*
*செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே!"*

என்று நம் ஆர்வம் வாய்விட்டு அலறுகின்றது!

"அம்பலத்தரசே, அருமருந்தே, ஆனந்த விண்ணே, சற்குருமணியே, ஆணவமாகிய முயலகனை மிதித்து நசுக்காய்; மான்போலத் துள்ளும் மனத்தை யடக்காய், துரியந் தன்னில் தூக்கிய திருவடியால் என்னைக் காவாய்! மனத்தின் கனவொழிந்து துரியங்கடந்த ஞானானந்தமருளாய்! ஐயனே, என் அப்பனே, நீயே அனைத்தும் ஐந்தொழிலும் நின் ஆடலே! நினது டமரகநாதம், ஒலியும் மொழியும் அளித்தது. நீ ஓங்காரத்தால் உலகைப் படைத்தாய்; ஞானக் கனலை இடக்கரந் தாங்கினை. அக் கனலில் எனது மடமை, பொய்மை, அகந்தை, ஐயம், அச்சம் எல்லாம் அழிக ! நினது நித்திய உபசாந்தக் கரங்களால் என்னை ஆசீர்வதிப்பாய்: அபயக் கரத்தால் அச்சந் தீராய் ! என் அன்பிற் கலந்தொளிரும் அருளமுதே, நினது கிரியாசக்தியான கங்கை பாய்ந்து, என் வாழ்வைப் பேரின்பச் சோலையாக்குக ! சிவானந்தமாகிய சந்திரன் என் உள்ளத்தில் உதயமாகி, என் இருளை விழுங்குக ! தலைவனே, என் அகந்தைப் புலியைக் கிழித்து அதன் உரியை நீ யணி ! பாசவெறிகளும், வீரியத் தினவுகளும் எரிந்து சாம்பலான என் யாக்கைத் தில்லைவனத்தில், என் இதயச் சிற்சபையில், சச்சிதானந்தத் திருநடனம் புரிவாயாக ! அப்பனே."

*"பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்*
*புகுந்துகலந் திடநிறைவாய்ப்*
*பொங்கி யோங்கும்*
*கங்குகரை காணாத கடலே, எங்கும்*
*கண்ணாகக் காண்கின்ற*
*கதியே, அன்பர்*
*தங்கநிழல் பரப்பிமயற் சோடையெல்லாந்*
*தணிகின்ற தருவே, பூந்*
*தடமே, ஞானச்*
*செங்குமுத மலரவரு மதியே, எல்லாஞ்*
*செய்யவல்ல கடவுளே !*
*தேவ தேவே !"*

என்று அடியார் மனமுருகும் நின் திருச்சந்நிதியே எனது பேரின்ப விண்ணாகும் !

நடராஜ உபாசனைக்கு, இந்த அர்ச்சனை மாலை பயனாகும்: இறைவனைப் போற்றிப் புகன்று, செபித்துச் சிந்தித்து, பாடி ஆடி, அர்ச்சித்து வந்தித்துச் சரண்புகுந்து, அருளும் அறிவும், அன்பும் இன்பமும், வினை வெற்றியும், சுத்தான்ம சித்தியும், எல்லாச் செல்வமும் பெற இப்பாமாலை வழிகாட்டும்.

என் உள்ளமன்றில் ஒருகணமும் அகலா தொளிரும் அந்தச் சிற்சபேசனை அர்ச்சிக்கவே, இப்பாமாலையைத் தொடுத்தேன். அன்பர் வேண்டுகோள் மீது, தமிழருக்கு இதனை அளிக்கிறேன். செந்தமிழ் மந்திரத்தால் தமிழர்அனைவரும் கடவுள் வணக்கஞ் செய்து அருளெய்துக. ஓம் நடனஜோதி !

கவியோகி சுத்தானந்த பாரதியார்

(பரிசுக் கட்டுரை)

# இலங்கையின் கல்வி வளர்ச்சியில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் தாக்கம்

*(சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மாமன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் மூன்றாம் பிரிவில் முதலாவது பரிசைப் பெறும் கட்டுரை)*

தனலக்சுமி கணபதி
புனித பேர்ணதேத் தமிழ் மகாவித்தியாலயம், சிலாபம்

உலக வரலாற்றில் பதிவாகியுள்ள பல பயணங்கள் புதிய வரலாறுகளைப் படைத்துள்ளன. ஆனால் 1893 இல் சுவாமி விவேகானந்தர் மேற் கொண்ட சிக்காகோ பயணம் புதிய வரலாற்றை மட்டுமல்ல, சுவாமிவிவேகானந்தரையே உலகிற்கு உயர்த்திக் காட்டியது எனலாம். ''நாவசைந்தால் நாடசையும்'' என்னும் பழமொழிக்குப் பொருத்தமான ஞானபொக்கிஷமாக சுவாமிகள் துலங்கினார்கள். அன்னாரின் போதனைகள் இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. அந்தவகையில் இலங்கைக் கல்வி வள்ர்ச்சியில், சுவாமிவிவேகானந்தரின் சிந்தனைத் தாக்கத்தை நோக்குவோம்.

சுவாமிகள் 1897 ஜனவரி 15ந் திகதியன்று மாலை கொழும்புத் துறைமுகத்தில் தனது வீரக்கால்களைப் பதித்தார். கொழும்பு நகர இந்துக்கள் ஆயிரக்கணக்கில் அவரைப் புடைசூழ்ந்து வரவேற்றனர். சுவாமிகள் கொழும்பு, கண்டி, வவுனியா, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் தனது ஞான ஒளியை நல்கி வேத வாக்குகளை புனித மழையாகப் பொழிந்தார்கள். அவரது சிந்தனைத் தாக்கம் அன்றே அனேகம் பேரை ஊடுருவியது. அதன்பயனாக சுவாமி விவேகானந்தர் பெயரில் இலங்கையில் பல பாடசாலைகள் உருவாகின. யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களில் பாடசாலைகள் சுவாமிகளின் பெயரில் உருவாகின.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் கூட சுவாமிகளின் போதனைகளின் அடிப்படையிலேயே, யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் பரமேஸ்வராக்கல்லூரியை நிறுவினார். தற்போது அது யாழ். பல்கலைக்கழகமாக ஒளிபரப்புகின்றது. சுவாமிஜி சிக்காகோ வீரராகத் திரும்பி ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டார்கள். அந்தநூலின் பெயர் ''கொழும்பு முதல் அல்மோரா வரையில்''. இதை உற்று நோக்கும் போது, கல்வித்துறைக்கு இந்நூலும் சிறப்பூட்டுவதாக அமைகிறது. சுவாமிஜி, ஆற்றிய உரை ''சுவாமி விவேகானந்தர் பிரசங்கம்'' என்று வெளியாகியது. இது சுவாமிகளின் முதல் மொழி பெயர்ப்பும் தமிழாக்கமாகவும் வெளிவந்தது. சுவாமி விவேகானந்தரின் பெயரில் பரீட்சைகளை, இந்து மாமன்றம் நாடுபூராகவும் நடத்தி பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்குகின்றது. தற்போது கூட அன்னாரின் மகிமையை, சிந்தனையை, மீண்டும் முறுக்கேற்றும் முகமாக, போட்டிகளை நடாத்துகின்றது.

சுவாமிகள் ஆற்றிய உரைகள் அவரது சிந்தனையின் எதிரொலிகளே; சுவாமிகளின் சிந்தனைக் கருத்துக்களால் உந்தப்பட்ட அனேகர், இலங்கையின் கல்வியில் வளர்ச்சியும் உயர்ச்சியும் கண்டு, உயர்தலைவர்களாக உருமாறியுள்ளார்கள். சுவாமிகள் இந்துக்களை நோக்கி அறைகூவியது, அவர்கள் கல்வியிலும் மறுமலர்ச்சி காணவித்திட்டதெனலாம். ''வெளியே வாருங்கள், மனிதர்களே! முன்னேற்றத்திற்கு என்றுமே முட்டுக்கட்டையாகும் குருமார்களை உதைத்துத் தள்ளுங்கள் ஏனெனில் அவர்கள் திருந்தமாட்டார்கள்; அவர்கள் உங்களை விரிவடைய விடமாட்டார்கள், அவர்கள் நூற்றாண்டு காலமான மூடநம்பிக்கை கொடுமையின் வழித் தோன்றல்கள், குருமார் சூழ்ச்சி முறையை ஒழித்துக் கட்டுங்கள். வெளியே வாருங்கள் மனிதர்களே! உங்களுடைய சின்னஞ்சிறு குழிகளைவிட்டு வெளியே வாருங்கள்; அயல் நாடுகளைப் பாருங்கள், அந்நாடுகள் முன்னேற்றப் பாதையிற் செல்வதைப் பாருங்கள்; முன்னோக்கிப் பார், பின்நோக்கிப் பார்க்காதே.....''. என்று கூறுவதிலிருந்து கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்கும்படி தனது சிந்தனையாற் தூண்டுகிறார் சுவாமிகள்.

மீண்டும் சுவாமிகள் கல்விவளர்ச்சி பெற இவ்வாறு சிந்தனையை முடுக்கி விடுகிறார். ''ஓ! சிங்கங்களே! எழுந்திருப்பீர்களாக, நீங்கள் ஆடுகள் என்னும் மயக்கத்தைத் தொலைத்து விடுவீர்களாக! நீங்கள் நித்தியமுடைய ஆன்மாக்கள், சுதந்திரமுள்ள சித்துருவங்கள்! ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்,

நித்தியர்கள், நீங்கள் சடப் பொருட்கள் அல்ல, எனவே விழித்துக் கொள்ளுங்கள். ஆண்மையும், ஆன்மீகமும் முக்கியம். சக்தி செயற்படட்டும். கல்வியின் இலக்கு ஆளுமையுள்ள பூரணமனிதனை உருவாக்குவதாகும்'' இந்தவகையில் சுவாமிகள் இறை நம்பிக்கையையும், தன்நம்பிக்கையையும் ஊட்டி மனிதனை பூரண மனிதனாக்க விளைகிறார்கள்.

உண்மையான ஆசிரியரின் பண்புகளை சுவாமிகள் இவ்வாறு புடமிடுகிறார்கள், ''ஆசிரியர் ஒளி பரப்புகிறார்'' தன்னைத் தானே பரிபூரணமாகத் தூய்மைப்படுத்திய மனிதன் அதிக சாதனைகளைச் சாதிக்கிறான். தூய்மை மௌனம் இவற்றிலிருந்தே ஆற்றல் பிறக்கிறது. தான் உரைக்கும் சொற்களில் தனது ஆத்மசக்தியை புகுத்தும் மனிதனுடைய வார்த்தைகளுக்கு பலம் அதிகம். கொடுப்பவரிடம் ஏதாவது இருந்தாற்தான் கொடுக்க முடியும். பெறுபவருக்கு திறந்தமனம் இருக்க வேண்டும் வாங்கிக் கொள்வதற்கு. சிலவேளைகளில் ஆழமான சொற்பொழிவுகள் கூட நிலையாது நீர்க்குமிழிகளாவதுண்டு. ஆனால் ஆன்ம பலமுள்ளவனது சாதாரண வார்த்தை கூட, சாதனை படைப்பதுண்டு. இத்தத்துவக் கருத்தை இலங்கைக் கல்வியில் இறை ஓட வித்திட்டவர் சுவாமி விவேகானந்தரே ஆவார்.

''மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவதே'' கல்வி என்று சுவாமிகள் மேலும் செப்புகிறார்கள். "மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துவதே சமயம்" என சுவாமிகள் வலியுறுத்துகிறார்கள். ஆகவே இந்த இரண்டு விஷயங்களிலும் ஆசிரியர் செய்ய வேண்டிய ஒரே கடமை, மாணவர் வாழ்விலுள்ள தடைகள் எல்லாக் குறுக்கீடுகளையும் அகற்றுவதாகும், இறைவன் மீதி இருப்பதைக் கவனிப்பான் என்று ஆசிரியர்களுக்கு சுவாமிகள் ஆலோசனை கூறுகிறார்கள்.

பெற்றோருக்கும் சுவாமிகள் ஆலோசனை கூறுகிறார்கள். எதிர்மறை எண்ணங்கள் மனிதனைப் பலவீனப்படுத்துகின்றன. சில பெற்றோர்கள் எப்பொழுதும் பார்த்தால் பிள்ளைகளை படிக்கும்படி வற்புறுத்துகிறார்கள். "உனக்குப் படிப்பே வராது, நீ முட்டாள்'' என்று பலவாறு திட்டித் தீர்ப்பார்கள். அதேபோல பிள்ளைகளும் முட்டாள்களாகவே மாறிவிடுகிறார்கள், அவர்களிடம் அன்பாகப் பேசி உற்சாகப்படுத்தினால் அவர்கள் முன்னேறி விடுவது திண்ணம். குறைகளைச் சுட்டிக்காட்டுவது ஒருவனுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்துகிறது. மாறாக இப்பொழுது உள்ளதை விடநல்ல முறையிற் செய்தால் இன்னும் பூரணமடையுமென ஊக்கப்படுத்த வேண்டும்.

''தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள். இவ்வாறு அறிவை அடைய வழிசெய்யுங்கள்'' என்று சுவாமிகள் தனது சிந்தனையைப் பரப்புகிறார்கள். இச்சிந்தனைகள் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி உள்ளதெனலாம். ஆன்மீகக் கல்வி வளர்ச்சிக்கும் இவை அதிகூடுதலாக வித்திட்டதெனலாம். "வேலை" எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதற்கு சுவாமிகள் இவ்வாறு விளக்கம் தருகிறார்கள். தசைகளின் மூலமாகச் சிறிதளவு சக்தியை வெளிப்படுத்துவதற்கு "வேலை" என்று பெயர். ஆனால் சிந்தனை எங்கே இல்லையோ அங்கே வேலையும் இராது. ஆகையால் உங்களது மூளையை உயர்ந்த சிந்தனைகளால், மகோன்னதமான இலட்சியங்களால் நிரப்பி வையுங்கள், இரவும் பகலும் அவற்றை உங்கள் கண்முன் வையுங்கள். எதற்கும் ஒரு இலட்சியம் தேவை. துரதிர்ஸ்டவசமாக அனேகர் இலட்சியமின்றி அலைமோதி அல்லல் உறுகிறார்கள். இலட்சியம் பெயரளவில் இருத்தல் தவறு, அது உள்ளத்தில் நுளைந்து மூளையில் முறுக்கேறி. இரத்த நாளங்களிற் புகுந்து, ஒவ்வொரு துளி இரத்தத்திலும் துடிதுடிக்க வேண்டும். அது உடலிலுள்ள ஒவ்வொரு மயிர்க்காலிலும் வியாபித்து நிற்க வேண்டும். அதுவரை உனது இலட்சியத்தைப் பற்றி நீ உன்னிடம் கேட்ட வண்ணமே இரு. என்று சுவாமி வலியுறுத்துகிறார். இந்த நற்சிந்தனை இலங்கை வாழ் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரது உடலிலும், உள்ளத்திலும் உறைந்து முறுக்கேற வேண்டும்.

மாணாக்கருக்கு சுவாமிஜி கூறுவது "முத்துச் சிப்பியைப் போல் இருங்கள்'' முதலிற் செவிகளாற் கேட்க வேண்டும்; பிறகு புரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்பு மனதை அலைக் கழிக்கின்ற எல்லாக் காரியங்களையும் விட்டு விட்டு, வெளிக்கவர்ச்சியால் பாதிக்கப்படாதபடி மனக்கதவைப் பூட்டித் தாழிட்டு அந்தப் பேருண்மையை நமக்குள்ளே வளர்த்துக் கொள்வதில் முழுமனதுடன் ஈடுபட வேண்டும். ஏழைக்கும் எழியோனுக்கும் அன்புகாட்டு, அறத்தை, அறிவை போதி என்று சுவாமிகள் வலியுறித்தியதால் இலங்கையில் ஏழை எழியோர்க்கும் கல்வியிற் சமவாய்ப்பு கிடைப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதெனலாம்.

''எல்லாப் பலவீனங்களையும் மூடநம்பிக்கையையும் கைவிட்டு சுயநலம் பாராது சேவை செய், அதுவே உனது வெற்றி'' என்பதை சுவாமிகள் வலியுறுத்துகிறார்கள். சுவாமிகளின் சிந்தனைத் தாக்கம் இலங்கைக் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் வித்திட்டுள்ளதை மேலே நாம் ஆராய்ந்தவற்றை ஒட்டுமொத்தமாக நோக்கும் கால் தெள்ளிடை தெளிவாகிறதல்லவா. அவரது தத்துவக் கருத்துகளை நாமும் கருத்திற் கொண்டு, இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு எம்மாலான பங்களிப்பை செய்ய முனைவோமாக.

# இந்துப் பெண்களும் சமயமும்

செல்வி கே. காந்திமதி (B. A. Dip. in Ed.)

சமய வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டு, நம் சமுதாயம் முன்னேற பெண்கள் பங்காற்ற முடியும். நம் சமய வரலாற்றிலும் பெண்கள் சிலர் பெரும் பங்காற்றியதை நாம் மறக்க முடியாது. நல்ல தாயாக, சிறந்த மனைவியாக, அன்புள்ள சகோதரியாக வாழ்ந்து சமயத் தொண்டு செய்த பேரடியார்கள் சிலரை நம் சமய வரலாற்றில் நாம் காணாமல் இல்லை.

இங்கு சிறந்த சகோதரியாக வாழ்ந்து அப்பர் சுவாமிகளைச் சைவ உலகிற்களித்த திலகவதியாரையும், சிறந்த மனைவியாக வாழ்ந்து நின்று சீர்நெடுமாறனையும் நாயனாராக ஆக்கியதோடு அவ்வரச அடியார்வழி சைவ எழுச்சியையும் ஏற்படுத்திய மங்கையர்க்கரசியாரையும் நாம் எவ்வாறு மறப்பது? தனித்த நிலையிலும் தம் ஞானப் பக்குவத்தால் அம்மையாக வாழ்ந்த காரைக்கால் அம்மையாரையும் இங்கு நினைக்க வேண்டும்.

சமய ஸ்தாபனமாக நாம் கோயில்களையே பெரும்பாலும் கருதுகிறோம். இருப்பினும் ஒருவனின் சமய வாழ்க்கை இல்லத்திலேயே தொடங்குகிறது. சமய வாழ்க்கை மலருவதற்கேற்ற சூழலை இல்லத்தில் நாம் படைத்துத்தர முடியாவிட்டால் வாழ்க்கையின் முதற் படியிலேயே வழுக்கி விடுகின்றோம் என்பதே பொருள்.

இந்து மக்களின் இல்லங்கள் உண்மையில் சமயச் சிந்தனையின் அடிப்படையில் அமைவனவே. கட்டிட அமைப்பு மட்டுமன்று வீட்டிலும் தூய்மை பேணப்படுதல் (செருப்பிட்டு வீட்டினுள் செல்லாமை) துளசி மாடம், பூஜையறை மாவிலை தோரணங்கள் போன்ற சிந்தனையும் சமய வாழ்வின் எதிரொலியே. சுருங்கக் கூறின் இல்லங்கள் இந்து பண்பாட்டை விளக்கி நிற்கும் நிலையங்கள் என்றே கூறவேண்டும்.

ஒரு பெண்ணின் பெருமை இப்பண்பாட்டு நிலையத்தின் தலைவி என்ற நிலையிலேயே சிறக்கிறது. மணத்தின் போது இல்லக் கிழத்தியாக தலைவியாகச் சிறக்கின்ற பெண் தாயாக வளருகின்ற நிலையில் பலராலும் மதிக்கத்தக்கவளாக மேலும் உயர்கின்றாள்.

*"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு"*

என்பர் திருவள்ளுவர். இல்லத்தில் சிறந்த சமயச் சூழலை ஏற்படுத்துவது இல்லத்தின் தலைவியையே பெரிதும் பொறுத்துள்ளது. "மனைவிக்கு விளக்கம் மடவார்" என்று பெரியோர்கள் கூறுவார்கள். "கிருக லட்சுமி" என்னும் வழக்கையும் நாம் கருத வேண்டும். "சமயம்" இல்லத் தலைவியின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருப்பது. சமயப் பண்பாட்டின் அடிப்படையில் பாரம்பரிய நடைமுறையில் ஈடுபாட்டோடு வளர்ந்து வருகின்ற ஒரு பெண் சாத்திர அறிவு பெறாமல் இருந்திருக்கலாம். ஆயின் அவள் வாழ்க்கை சமய பாரம்பரியத்தில் அமைந்த இலட்சிய வாழ்கையாகவே இருக்கும். நூல்வழி கிடைக்கும் அறிவை விடவும் பாரம்பரியக் கோட்பாட்டில் ஒரு பெண்ணுக்கு இருக்கும் உறுதியே அவள் வாழ்க்கை மேம்பாட்டுக்குத் துணை செய்யவல்லது.

சில சமய ஒழுக்கங்களைப் பேணிக்காப்பதோடு குடும்பத்திற்கென்றே தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு அவள் வாழும் தியாக வாழ்க்கையும் நம் பண்பாட்டின் வழி அவளுக்குக் கிடைத்த ஒரு செல்வமேயாகும்.

இந்துக்கள் வாழ்வில் "சமயம்" என்பது சில கோட்பாடுகள் அன்று. அது ஒரு வாழ்க்கை நெறியே. எனவே அன்றாட வாழ்க்கையிலும் அதனை நாம் காணமுடியும். காலையில் எழுந்து நீராடி இறைவனை நினைந்து விபூதி அணிந்து குங்குமப் பொட்டிட்டு அவள் குடும்பத் தொண்டினை – பணியினை மலர்ந்த முகத்தோடு செய்துவரும் செயல், அவள் வாழ்க்கை அடிப்படையின் சமய உணர்வை யாவருமே எளிதில் அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய பெண்ணின் தோற்றமே நம் பண்பாட்டின் வடிவம் எனல் வேண்டும். இத்தகைய பெண்மணி தாயாகி தன் குழந்தையைத் தன் பண்பாட்டுச் சூழலில் வளர்க்கும் திறத்திலேயே நம் சமயத்தின் பிற்காலம் அடங்கியுள்ளது எனலாம். தாய் அன்பிலேயே குடும்பப் பிணைப்பு உருவாகிறது. இக் குடும்பப் பிணைப்பே நம் சமயக் கல்வியின் பண்பாட்டுக் கல்வியின் முதல் பாடம்.

காலம் செய்த கோலத்தால் இன்று இளைஞர்கள் போன்று பெண்களும் பாரம்பரியப் பண்பாட்டிலிருந்து நெடுந்தூரம் விலகிச் சென்றுவிட்டாலும், இன்றும் ஒரளவேனும் நம் சமயப்பண்பாடு பேணிக்காக்கப்படுகிறதென்றால் இது பெரிதும் பெண்களாலேயே என்றுதான் கூறவேண்டும். திருக்கோயில்களிலும் சமயக் கொண்டாட்டங்களிலும் பெண்களே மிகுதியாகக் கலந்தும் கொள்கின்றனர். இன்றைய நிலையிலுள்ள இந்துப் பெண்களைப் பற்றியும் அவர்கள் ஓர் இலட்சிய இந்துப் பெண்ணாக வாழும் வழிமுறைகளையும் நாம் ஓரளவு சிந்திப்பது நலமே.

மலேசியாவை எடுத்துக் கொண்டால்அந்நாடு பல இன, மத, மொழிகளைக் கொண்ட ஒரு நாடு. ஒவ்வொரு சமயமும் சில கோட்பாடுகளைக் கூறுவதை அறியும் போது நம் சமய அறிவுக் குறைபாட்டால் சில வினாக்கள் இன்று எழுப்பப்படுகின்றன. புற உலகில் சமுதாய நிலையில் ஏற்பட்ட வளர்ச்சியோடு பழைய பண்பாட்டின் வழி கிடைத்துள்ள வாழ்க்கை நடைமுறைகள் அல்லது நம் சமயமும் நாம் பேணும் பண்பாடும் ஒத்துச் செல்ல முடியுமா? என்ற கேள்வியே இன்று மிகுதியாகக் கேட்கப்படுகின்றது.

சமுதாய நிலையில் ஏற்படும் நடை உடை பாவனை போன்ற மாற்றங்களைப் புற உலக வளர்ச்சி என்றால் அவை இன்று புதிதாக ஏற்படுவனவல்ல. ஒவ்வொரு காலத்திலும் இவை ஏற்பட்டுள்ளன. இனியும் மாற்றம் ஏற்படவே, மேலும் விஞ்ஞான முன்னேற்றத்தால் ஏற்பட்ட சமுதாய வளர்ச்சி என்றால் அதுவும் புற வளர்ச்சியே. இவ்வளர்ச்சி நம் சமய வாழ்வுக்கு எவ்வகையிலும் முரணானதன்று. ஒருவனுடைய வளர்ச்சி என்பது உண்மையில் அகவளர்ச்சியே. சில வாழ்க்கை முறைகள், ஒழுக்கங்கள் – பழையன என்ற காரணத்தாலேயே ஒதுக்கத்தக்கனவாகி விடக்கூடாது என்பதே இங்கு வற்புறுத்தப்பட வேண்டுவது. புதுமைப் பெண்ணைப்பற்றி பாடிய பாரதியும் பழமையின் வழிவந்த இந்துப் பெண்ணின் புது வடிவத்தையே பாடினான்.

*"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்*
*பொய்ம்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்*
*சதுர்மறைப்படி மாந்தர் இருந்தநாள்*
*தன்னிலே பொதுவான வழக்கமாம்".*

என்னும் பாடல் இங்கு நோக்கத்தக்கது.

சமுதாய மாற்றத்தால் நம் மக்கள் – சமய வாழ்வைக் காலத்திற்கொவ்வாததெனக் கருதுவது சமயம் பற்றிய போதுமான அறிவின்மையும் தாழ்வு மனப்பான்மையுமேயாகும்.

ஒருவனை அவன் புறத் தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடுதல் தவறு என்பதை நாம் அறிவோம்.

"உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றுள் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு" –

என்பது திருக்குறள் வாக்கு. புறவாழ்க்கையில் மனிதன் தன் அறிவால் சில சௌகரியங்களைத் தேடிக் கொள்ள முடிந்த காரணத்தாலேயே அக வாழ்க்கை – சமய வாழ்க்கை – தெய்வீக வாழ்க்கை காலத்திற்கொவ்வாதது என்று கருதுவது சமய வாழ்வின் அடிப்படையினை விளங்கிக் கொள்ளாமை என்றே கூறவேண்டும்.

---

செய்திக் குறிப்பு

## சுவாமி விவேகானந்தர் பிறந்ததின விழா

சுவாமி விவேகானந்தர் பிறந்த தின விழாவை ஜனவரி 12ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமும், யாழ். மத்திய கல்லூரி இந்து மாமன்றமும் இணைந்து நடத்தின. இவ்விழா சர்வசமய சமரசத்தை நெறிப்படுத்தும் தினமாகவும் கொண்டாடப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளும், வண. பிதா கருணைராஜ், எம். யூ. எம். தாஹிர் ஆகியோர் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களின் சார்பில் கலந்துகொண்டு அருளுரையாற்றினர். அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கப் பொதுச் செயலாளரும், அகில இலங்கை இந்து மாமன்றத் துணைச் செயலாளருமான திரு. த. மனோகரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் வரவேற்புரை திரு. ஞானதிருக்கேதீஸ்வரனால் ஆற்றப்பட்டது. ஆரம்ப உரையைக் கல்லூரி அதிபர் திரு. க. இராசதுரை ஆற்ற யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். கல்விப்பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை, திரு. ஆறுதிருமுருகன் ஆகியோரும் உரையாற்றினர். யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் கவிதா நிகழ்வு எனும் நிகழ்ச்சியும், தி. கருணாகரனின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. திரு. எல். ஓங்காரமூர்த்தி நன்றியுரையாற்றினார்.

சு. இரத்தினசிங்கம்
(அகில இலங்கை இந்து மாமன்றப் பேராளர்)

# விவேகானந்தர் வாழ்க

(அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமும் யாழ். மத்திய கல்லூரி இந்து மாமன்றமும் இணைந்து நடாத்திய சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி தின வைபவத்தில் இடம்பெற்ற பாடல். யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட இப் பாடலை, வைபவத்தின் போது இன்னிசை வேந்தன் திரு. தி. கருணாகரன் பாடியிருந்தார்)



(1)

பாரதத்தின் முன்னோர்கள் செய்தபேற்றின்
பக்குவத்தில் வேர்விட்டு(ப்) பண்பாடென்னும்
சாரத்தை ஊட்டமகாய்(த்) தானாயேற்று(ச்)
சார்இந்துத் தத்துவத்தைத் தகவாய்க்கொண்டு
சீரொக்கும் கிளை ஒச்சி நிழலாய ஆக்கி(ச்)
செம்மையெனும் பூமலர்த்தி(ச்) சமரசத்தின்
பேரொக்கும் நறுமணத்தை(ப்) பெருக்கிநின்று
பீடுபெறு பெட்டகமே விவேகானந்தர்

(2)

பல்வளமும் செழித்தநகர் கல்கத்தாவின்
பழங்குடியில் நரேந்திரராம் நாமங்கொண்டு
தொல்புகழை வெளிக்கொணரத் தோன்றிவந்து
தூயவழி துணைவலியாய்(த்) துலக்கிநன்கு
கல்விவழி தனையுயர்த்தி நின்றபோதும்
கனன்றிட்ட மெய்ப்பொருளை(க்) காண நின்று
சொல்லவலார் யாரோ? வென் றெங்கு மேகி(த்)
தூயகுரு இராமகிருஷ் ணரிடமேயானார்

(3)

சாத்திரத்தின் பயிற்சியொரு ஞானமற்றும்
சார்ந்துவரு மானுடத்தின் தொண்டுக்கான
ஏத்திவரு பணிகளுக்காய்(த்) தம்மை ஆக்கி
ஏற்றமிகு மெய்ப்பொருளைத் தேடிநின்றார்
சீர்த்திபெற அப்பொருளைக் காணும் போதில்
திருப்திபெறா தலைந்துகலந்து தேறாநின்றார்
கீர்த்திபெறு குருராம கிருஷ்ணரின்தாள்
கிட்டியதும் கேள்வியெல்லாம் அடங்கப்பெற்றார்

(4)

காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே !
கனன்றிட்ட ஞானஒளி காட்டக்கண்டு
கேட்டவழி மெய்ப்பொருளிற் தானும் ஒன்றும்
கேண்மையென யோகமதைக் கிட்டிவென்றார்
ஊட்டவரு பிறப்பதுவும் உலகமுய்ய
உருவெடுத்த உருவென்றே உணரப்பெற்றார்
கூட்டுவித்த குருஅவரும் முழுதும்தந்து
குவலயத்தைக் காத்திடெனக் கூறிச்சென்றார்

(5)

சீடர்களின் முதல்வரெனத் திகழ்ந்துராம(த்)
திருவுடைய கிருஷ்ணரின் பெயராலெங்கும்
நாடறியப் பெருமடங்கள் நிறுவி ஞான
நற்கருமம் புரிந்துண்மை நாட்டிவந்தார்
நாடறியக் குமரிமுதல் இமயம்ஈறாய்(ப்)
பயன்பெருக இறைபயணம் செய்து எங்கும்
தேடரிய இறை உயர்வை மக்களெல்லாம்
தெவிட்டாது மாந்திடவே சேவைசெய்தார்

(6)

அனைத்துமத மாநாட்டில் சிக்காக்கோ
அதிர்ந்திடவே ஞானஒளிக் கொடியைஏற்றி,
அனைத்துலகை சாந்தியிலே ஈர்த்து இன்பம்
எய்திடவே பணிமுடித்து இயற்கையானார்
தனித்துவக்கச் சத்தியத்தின் வெற்றிக்காக
இடர்வரினும் எதிர்நின்று கருமம் ஆற்றும்
தனித்துவத்தை மக்களெலாம் தகவாய் ஏற்க(த்)
தந்தவிவே கானந்தர் தாழ்கள் வாழ்க !

# இதுவோ இல்லையேல் அதுவோ

சிவ. சண்முகவடிவேல்

சிவத் திருமுறைகள் பன்னிரண்டு. அவை அருள்வாக்கு. தானே அதுவாய் நிற்கும் சிவம் தந்த திருவாக்கு. பிறர் நோக்கு கலவாதது.

தூமறை பாடும் வாயான் தொண்டர் தலைமேலான். நாவிலுள்ளான். வாக்கினுள்ளான். நெஞ்சினுள்ளான். அருள்நிலை பாகர்கள் வாக்கு எம்பிரான் திருவுளப் பாங்காகும்.

"நிலையினா னெனதுரை தனதுரையாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்..." என்பது ஞானசாரியர் ஞானசம்பந்தர் நல்வாக்கு. (1.76.1) இது போல் திருமுறைகளில் வருவனவற்றை அடியார் வாக்கு – அறைகழல் அண்ணலார் திருவாக்கு என்பதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

மெய்யன்பர்கள் வெளிப்படுத்திய திருமுறை நிறைமொழி. இறையளவு எனும் குறைவிலாதவை. ஓர் எழுத்தோ, எழுத்தினால் ஆக்கப்படும் சொல்லோ சொற்களினால் தொடுக்கப்படும் பொருளோ சிலேடையாக அமையாது. பாட பேதங்களாகவும் கொள்ள இயலாது. இதுவாகவும் பொருள் பொருந்தலாம். அல்லது அதுவாகவும் அமையலாம் என்ற மலைவிற்கும் இடமில்லை. அவ்வாறான சலனம் வருமிடத்து ஆன்றோர் வாக்கு 'அதுவாக' இருக்க முடியாது. எழுத்திலோ, பதிப்பிலோ தவறு நிகழ்ந்துள்ளமை தெற்றெனத் தெளிவாகும். அது நமது திருவருட் குறைவே.

திருமுறைப்பாடல் பதிப்புக்கள் பல. பலவற்றிலும் பலவிதமாகப் பதிக்கப்பட்டிருப்பதைப் பரக்கக் காணலாம்.

அப்பதிப்புப் பேதங்களை இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்துக்கள் மாறி இருப்பது ஒருவகை. மற்றையது சொல் அதிகரித்திருப்பது, சொல் மாறி இருப்பது.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டை உற்று நோக்கலாம். ஒன்று– எழுத்து மாறிய பதிப்பிற்கு எடுத்துக்காட்டு.

பண் – கௌசிகம் திருமுறை – 3

*கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்*
*இல்லா ரேனு மியம்புவ ராயிடின்*
*எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்*
*நல்லார் னாமம் நமச்சி வாயவே.*

இத்திருப் பாட்டில் மூன்றாம் அடியில் மூன்றாஞ் சீர் 'நீங்குவர்' என்பதாகும். நமச்சிவாயத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுபவர் எல்லாத் தீங்கும் நீங்குவர் எனப் பொருள் கொள்ளலாம்.

வேறு பல பதிப்புக்களில் அதே சீர் 'நீக்குவர்' எனக் காணப்படும். நமசிவாயத்தை நவின்றால் நாயகன் எல்லாத் தீங்கையும் நீக்குவர் என்று பொருள், அமையும்.

வல்லினம் 'ங்' ஙகரம், 'க்' ககரம் வல்லினம். சிறிய மாற்றம் பெரும் தடுமாற்றத்தைத் தராநிற்கும். எல்லாத் தீங்கும் தாமாக நீங்குகின்றனவோ? இறைவனால் நீக்கப்படுகின்றனவோ என்ற ஐயப்பாட்டை எழுப்பிவிடும்.

அதனைச் சமாளிக்க இரண்டு விதமாகவும் பாடலாம் என்று கூறித் தப்பித்துக் கொள்ளலாம்.

ஆனால் ஞானசம்பந்தப் பெருமான் எப்படிப் பாடினாரோ ? அதை ஆராய்ந்து அவ்வண்ணம் பாடப்படுவதல்லவோ பண்புடைமை.

'ன்', 'னா', 'ள்', ளா என்னும் ஐயப்பாட்டிற்கு ஓர் உதாரணம்–

*திருவாசகம் – 51 அச்சோப்பதிகம். பாடல் 9*
*செம்மைநலம் அறியாத சிதட ரோடுந் திரிவேனை*
*மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்*
*நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த*
*அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.*

என்று பல பதிப்புக்களில் காணப்படுவது. இப் பாடலில் இரண்டாம் அடியில் நாலாம் சீரில் அமைந்துள்ள 'முதல்வன் தான்' என்பது 'முதல்வன் தாள்' என ஒரு சில பதிப்புக்களில் காணக்கிடக்கின்றது.

முன்னையதில் முதல்வன் என்பதற்குத் 'தான்' அழுத்தம் கொடுக்கிறது. பின்னையதில் முதல்வன் 'தாள்' அமைவது பொருத்தமாக உள்ளது. மனநிறைவையும் தருகின்றது.

சிவபுராணத்தோடு திருவாசகம் ஆரம்பமாவது. 'நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள், வாழ்க' எனத் தொடங்குவது. அதே வார்த்தையோடு 'முதல்வன்தாள்' என நிறைவு பெறுவது பொருத்தம்.

திருத்தொண்டர் புராணம் – 'உலகெலாம்' எனத் தொடங்கி 'உலகெலாம்' என நிறைவு பெறுவது ஒப்பு நோக்கற்குரியது.

இரண்டு: சொல்மாற்றம் (அத்தாவுன்னடி)

பல பதிப்புக்களில் 3ம் திருமுறை திருவாவடுதுறைத் திருப்பதிகத்தில் 10ம் பாடல் இரண்டாம் அடியில்,

"அத்தாவுன் அடியலால் அரற்றாதென் நா" என்று வெளியிடப்பட்டுள்ளது. தருமபுர ஆதீன வெளியீட்டில், "அத்தாவுன்னடி அரற்றாதெந்நா" எனப் பதிக்கப் பெற்றுள்ளது. எதை ஏற்றுப் பாடுவது?

அதே போல 9ம் திருமுறையில் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு 9ம் பாடலில், மூன்றாம் அடியில் நாலாஞ்சீர் பழமையான பல பதிப்புக்களில் பின்வருமாறு அமையும், "ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாக" என்று உளது.

சில பதிப்புக்களில்,.. "ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம் பலமே இடமாக" எனப்பதிக்கப்பட்டுள்ளது. இந்து ஒளி – தீபம் 2 சுடர் 3ல் பஞ்சபுராண வரிசையில் திருப்பல்லாண்டும் அவ்வாறே அமைந்துள்ளது.

எதை சரியாக ஏற்றுப்பாடுவது? இவை போன்ற அநேகம் மாறுபாடுகள் சைவத்திருமுறை வெளியீடுகளில் காணப்படுகின்றன. உண்மை ஒன்று, அருளாளர்கள் பலபடப் பாடவில்லை என்பது நிச்சயம். அவர்கள் இப்படித் தான் பாடினார்கள் என்பதை அறிவது எப்படி? இராசராச சோழனுக்கு நம்பியாண்டார் நம்பி மூலம் பொல்லாப் பிள்ளையார் திருமுறை வைப்பிடம் உணர்த்தியதுபோல தவஉள்ளம் படைத்த இராசராசசோழன் ஒருவர் திருவருள் நெறிப்பட்டு உணர்த்தாதவரை உண்மையை உணர்வது அரிது போலும்.

# வன்னேரிக்குளம், ஐயனார்புரம் யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் வயோதிபர் இல்லத் தலைவரின் அன்பு வேண்டுகோள்.

பேரன்புடையீர் !

## யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் ஐயனார்புரம் வயோதிபர் இல்லம் - நிதி உதவி

யாழ்ப்பாணம், வன்னி பெரும் நிலப்பரப்பு ஆகிய பரந்து பட்ட இடத்தில் போர்க்கால சூழ்நிலையால் 1998ம் ஆண்டு தொடக்கம் மக்கள் தாங்கள் தேடிய வீடுவாசல் பொருட்கள் ஆகியவற்றை இழந்து நிர்க்கதியான நிலையில் வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந் நிலையை 1995ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற படையெடுப்பு மோசமாககியுள்ளது. பல்லாயிரக் கணக்கான மக்கள் குடா நாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப் பெரும் நிலப்பரப்பில் தஞ்சம் புகுந்த நிலை நாடறிந்த விடயமாகும். இப்பின்னணியில் ஆதரவற்ற வயோதிபர்கள் வீதிகள் தோறும் அலைந்து திரிந்து பொது இடங்களிலும், வைத்தியசாலைகளிலும் இறந்த சம்பவங்கள் பல உண்டு. மேலும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் வயோதிபர் பராமரிப்பு ஓர் சமய சமூகத் தேவையாகவே உருவெடுத்துள்ளது.

இப்பின்னணியில் யோகர் சுவாமிகளின் அடியார்கள் ஒன்றுகூடி ஆதரவற்ற வயோதிபர்களைப் பராமரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர். இதன் காரணமாக 1996ம் ஆண்டு கிளிநொச்சியில் நாம் எடுத்த நடவடிக்கை, இராணுவ நடவடிக்கை காரணமாகக் கைவிடப்பட்டு 01. 07. 97 ல் அரசாங்க அதிபர், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஓர் வயோதிபர் இல்லத்தை அமைத்து யோகர் சுவாமிகளின் திருவருளையே மூலதனமாகக் கொண்டு இல்லத்தை நடாத்தி வருகிறோம். தற்பொழுது இல்லத்தில் 32 ஆண்களும், 19 பெண்களுமாக மொத்தம் 51 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

65 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற வயோதிபர்களை அவ்வப் பகுதி கிராம உத்தியோகத்தர்கள், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் சிபாரிசுடன் அனுமதித்து வருகின்றோம்.

### நிலையத்தின் நிலைப்பாடுகள்

உணவு, ஊழியர்களின் வேதனம் ஒரு நாளைக்கு ரூபா 3750.00. ஒரு வயோதிபரை தத்தெடுப்பதாயின் ஒரு மாதத்திற்கு செலவு ரூபா 1500.00. ஒரு வயோதிபரை ஒரு வருடத்திற்கு தத்தெடுப்பதாயின் ரூபா 17500.00. ஊழியர் சம்பளமும் பராமரிப்பும் ஒரு வருடத்திற்கு ரூபா 663000.00.

இவ் இல்லத்திற்கு நிரந்தர நிதி இல்லாமல் தொடர்ந்தும் இவ் இல்லத்தை நடத்துவதில் பெரும் பணச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. ஆகவே, தாங்கள் பெரும் உள்ளங் கொண்டு இவ் இல்லத்தை நடாத்துவதற்கு நிதி உதவி மூன்று மாதத்திற்காவது வழங்கி இம் மனிதத் தெய்வங்களின் உள்ளங்களை குளிர வைத்து, அதன் புண்ணியத்தை தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினர்க்கும் கிடைக்க வேண்டும் என சற்குருநாதரின் திருவடியை வேண்டி நிற்கின்றோம். நிதியாகவோ பொருளாகவோ ஒத்துழைப்பு நல்கலாம் எனக் கருதுகின்றோம்.

நிதி வழங்கும் பொழுது மக்கள் வங்கி கிளிநொச்சி கணக்கு இலக்கம் 2692 அல்லது தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இலக்கம் 1297 ஆகிய வங்கிகள் மூலம் அனுப்பலாம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இவ் விடயத்தை வெளிநாட்டில் வாழும் நலன் விரும்பிகள், யோகர் சுவாமிகளின் அடியார்கள் ஆகியோரின் உதவிகளையும் நாங்கள் பெற்றுக் கொள்ளலாம் எனக் கருதுகின்றோம்.

தங்கள் விசுவாசமுள்ள
மு. கந்தசாமி
இல்லத் தலைவர்.

---

# *மாணவர்களின் வெற்றி*

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவில் நடத்தப்பட்டு வரும் கொழும்பு – இரத்மலானை இந்துக் கல்லூரியின் இலவச மாணவர் விடுதி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் இன்று படிப்படியாக நிறைவேறிவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. ப (உயர்தரப்) பரீட்சையில் மேற்படி கல்லூரியில் ஏழு மாணவர்கள் சிறப்பாகச் சித்தியடைந்து, பல்கலைக்ழகம் செல்வதற்கான தகுதியும் பெற்றுள்ளனர். இந்த ஏழு மாணவர்களுள் ஐவர் இலவச மாணவர் விடுதியைச் சேர்ந்தவர்கள் என்பது ஒரு சிறப்பான விஷயமாகும்.

வசதி குறைந்த பிள்ளைகளுக்கு ஆதரவளிக்கவும், அவர்கள் தங்கள் கல்வியைத் தொடருவதற்கு உதவும் வகையிலும் இந்து மாமன்றத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்த இலவச மாணவர் விடுதியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களின் ஊக்கமும், அதனால் கிடைத்த பரீட்சை வெற்றியும் விடுதி ஆரம்பிக்கப்பட்டதன் முழுநிறைவான முதல் வெற்றிப்படி என்பதையிட்டு மாமன்றமும், கல்லூரி நிர்வாகமும் பெருமைகொள்கிறது.

இந்த இலவச மாணவர் விடுதியைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் கல்வியில் சிறப்பான வளர்ச்சியடைந்து, எதிர்காலத்தில் நாடு போற்றும் நற்பிரஜைகளாகத் திகழ வேண்டும் என்பதில் மாமன்றத்துடன், கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் அனைவருமே பெருவிருப்புக் கொள்கிறார்கள்.

# Saiva Periyar Sivapathasundaranar

**Saivaperiyar memoril Address by Mr. R. Namasivayam,**
**(President of the Thirukketheeswaram Temple Restoration Society) at Ramakrishna Hall, Wellawatha.**

Saiva Periyar Sri La Sri S. Shivapadasundranar B.A. was born in a family of Tamil, Sanskrit and Shaiva scholars on 17th January 1877 at Puloly, Vadamarachi, Jaffna District. His father Thiru Subramania Pillai was a teacher and Tamil scholar. Thiru Subramaia Pillai's brothers were Kumarasamy Pulavar and Thiru Kanapathipillai. They and one of his sisters Thirumathy Parupathipillai were all accomplished scholars. The young Shivapadasundram had thus the good fortune of learning Shaiva Religion and Tamil at Home. He learned Sanskrit under Thiru Kanapathipillai who was a Professor of Sanskrit at Maharajah College, Trivandram, India. Later he graduated from the Madras University and took to teaching which he performed with distinction for over thirty five years. During this period he was the Principal of Victoria College, Chulipuram, Valigamam West, Jaffna, 1924-1933. On his retirement he took residence at Kandavanam, Polikandy. His residence was in proximity to the well known Shanmuga Temple. He was an ardent devotee of this great temple.

Sri La Sri Shivapadasundranar B.A. had a razor sharp intellect and penchant for logical thinking; these qualities are reflected in all his writings. He was a versatile writer and has written several books in Tamil and English on wide ranging subjects - Shaiva Religion, Education, Psychology and Logic. His magnum opus in Tamil was his brilliant commentary on Thiruvarudpayan, one of the fourteen Saiva Sidhanta Epistemological books and in English was his Saiva school of Hinduism. This has been recognized as an outstanding book, it is prescribed as a text book at the Benares University at the sacred city of Benares (Kasi), India, for the M.A. degree examination on Saiva Sidhantam. Most of his other books are text books locally.

Sri La Sri Shivapadasundranar B.A. was a teacher par excellence and an able administrator. The golden period of Victoria College was during` his stewardship as Principal. It became a famous seat of learning, then,

Messrs N. Sabaratnam, S. Sithamparapillai, K. Krishnapillai and V. Nadarajah were all Saiva Periar Shivapadasundram's old students. They were Principals of well known Colleges in Jaffna. Mr. C. Loganathan General Manager of the Bank of Ceylon was another distinguished old student of Saiva Periar.

In Malaysia and Singapore there were several old students of Saiva Periar who held high positions in Government service. They established a branch of the Thiruketheeswaram Temple Restoration Society and took part in the restoration work on an appeal made by Saiva Periar.

Saiva Periyar was reputed to be a reformer of recalcitrant pupils who were a problem to the parents and other schools. Under his care they became disciplined pupils, did well in their studies ans life. Saiva Periyar Shivapadasundaranar worked with Sir Ponnambalam Ramanathan and Hon. S.Rajaratnam in founding the Hindu Board of Education. For three years, 1928-1930 Saiva Periar was the President of the Hindu Board of Education, Jaffna. The services of the Hindu Board of Education and Hon.S.Rajaratnam should be commemorated.

In the year 1930 Saiva Periyar presided over the Annual Sessions of the Jaffna Youth Congress lead by Mr. Handy Perinpanayagam a leading Educationist, Social Reformer and a disciple of Mahatma Ghandi. I was an active member and served in the junior Wing of the Executive Committee. One of the main objects of the Youth Congress was the abolition of untouchability and the Caste System from Tamil Society.

The annual Sessions of the Youth Congress was held at the Teachers Training College of the Hindu Board of Education at Thirunelvely, Jaffna. I took part in this Session. Saiva Periyar presided over the Sessions. In his presidential address on 21.04.1930, Saiva Periyar stated his views on Caste untouchability, equal seating and Temple Entry putting in his own words', "there was no such thing as untouchability in Varnashrama Dharma. The imposition of social disablities such as not allowing equal seating was not found in those Religious books and there was no justification for it. "Within a few minutes of the beginning of the Sessions, the hall was stoned by the adherents of the Veda Agama Sangam, a fundamentalist group of the Saivaites. The Sessions was adjourned to the Ridegeway Hall, Jaffna; Saiva Periar the President was unperturbed.

When the Government made an order that Minority Tamil Children in schools should be provided equal seating facilities with other children Saiva Periyar along with Sir Ponnampalam Ramanathan and Hon. S. Rajaratnam fully supported the Government order. They got the Hindu Board of Education to implement it in all it's school.

For several years Saiva Periyar served with distinction as a Member of the Board of Education, an advisory body nominated by the Government.

In the year 1945 Saiva Periyar visited the Sacred City of Chidamparam in Tamilnadu. He had gone on a pilgrimage to worship Lord Natarajah and he was invited by the Sri Lankan undergraduates of the Annamalai University to address them. He spoke with excellence on the subject - "புராணங்களின் பெருமையும் அருமையும்." Professor T. P. Meenachi Sundaranar, the eminent Scholar presided over the lecture and commended it.

In 1931, Sri Lanka got the Donoughmore Constitution. The Youth Congress rejected the Constitutional Reforms as it fell short of independence. Youth Congress called for the boycott of the ensuing elections.

All candidates in the North except for the Mannar seat had pledged not to hand over the Nomination Papers. However on the Nomination Date Col. S. Saravanamuthu heard this and let out an imprecation in filth. Saiva Periyar just smiled.

With some persuasion Col. Saravanamuthu yielded. Subsequently he profusely apologised to Saiva Periyar.

Mr. C. Subramaniam (Orator) another eminent educationist in his article :Thoughts on Saiva Periyar" has observed as follows:- "Saiva Periyar is a man of transparent sincerity, his utter selflessness, absence of any trace of Ego and his keen intellect marked him out as an outstanding personality".

Kirupananda Variar of Tamil Nadu another ardent devotee of Lord Murugan had great regard for Saiva Periyar. He considered Saiva Periyar as a Gnana Achariar. Variar visited Saiva Periyar many times during his sojourn at Valvettithurai Amman Temple delivering a series of lectures. Kandavanam at Polikandy is adjacent to Valvettithurai.

Mahatma Ghandi during his visit to Jaffna in the year 1927, at the invitation of Saiva Periyar visited Victoria College. Saiva Periyar received Mahatma with great respect and garlanded him; Mahatma addressed the Student Assembly and the Staff.

Saiva Periyar retired at the age of 55. He did not ask for any extension as most of the Principals and teachers would do. He refused to accept any farewell function.

Saiva Periyar was eager to live as a Recluse at Kandavanam, Polikandy a sprawling sea side village halfway between Valvettithurai and Point Pedro. At Kandavanam he spent most of his time serving his favourite Deity the Lord of the Kandavanam Temple, in serving the Lord he had Saint Appar Swamigal in his mind and emulated his example.

Dr. C. Narayana Menon a former teacher of English Literature at Victoria College - under Saiva Periyar - when he heard of Saiva Periyar's retirement - offered the Vice Principalship of the Benares University - a key and prestigious post, Saiva Periar politely declined it. He did not want even for a day to lose sight of his Lord of the Kandavanam Temple. Dr. C. Narayana Menon revered Saiva Periyar. I visited Dr. C. Narayana Menon twice at the Benares University. I learned English Literature under him at Victoria College. He was an excellent teacher.

After Thuraichai Sivagnana Swamigal, author of the classic Thiravida Ma Padiam (துறை சைச் சிவஞான சுவாமிகள் திராவிட மா பாடிய கர்த்தர்) and our Sri La Sri Arumuga Navalar of Nallur, Jaffna following their foot steps, Saiva Periyar S. Shivapadasundaranar was the greatest and the most profound Scholar and Author both in Tamil and English in Saiva Religion and Saiva Siddhanta Philosophy.

We need more English books on Saiva Religion and Saiva Siddhanta Philosophy.

Saiva Periyar had all his life served Saiva Religion with single minded dedication and devotion and the Saiva world would always remember him with gratitude.

The completin of the Thirupani (திருப்பணி) of the Thiruketheeswara Temple would be the most fitting and ever lasting memorial for him. He attained the most sacred Lotus feet of Sivaperuman on the 14th Day of August, 1953 at his residence at Puloly.

Our present system of Education is lopsided bereft of our Religion and Culture, our men and women who received it attend temples and perform various rites and

ceremonies and apply Viputhy without knowing their significance, meaning and the real purpose; they are performed as routine exercise traditionally followed in the family. In consequence they do not know the difference between Hinduism and Saivaism; they are ignorant of the fact that Hinduism by itself is not a religion; it is the common Nomenclature for a group of religions - Saivam, Vaishnavam and Saktham, the three main religions of India in practice; further they are vulnerable and become adherents to one or other of the following heretic faiths, not knowing that they are all mirages of varying Dimension.

1. Sri Sathya Sai Baba Cult
2. Vallalar Ramalinga Swamigal Cult
3. Hawai Saivasm
4. Veera Saivasm
5. Anjaneya Cult
6. Ayappa Cult
7. Saktha Cult
8. Votaries of 'In Tamil Only' (தனித்தமிழ்) in Temple rites who too are ignorant of Saiva Religion and its epitemology and its philosophical System - Saiva Siddhantam, hence their desire to have everything in Tamil only.

Most of our priests are incompetent and not properly ordained. They mechanically repeat the Manthirams without knowing the meaning. We require a Saiva Savant of Saiva periyar S. Sivapadasundaranar's eminence and calibre to dispel this Mayai that has engulfed a section of our Society.

## THE BIG QUESTION IS "WHEN COMES SUCH LEADER"

I am certain of stirring up a hornet's Nest in mentioning these frailities of our Saiva Society. I would not be detered. I am only highlighting the true state of affairs in the interest of our Saiva Religion and it's philosophy. I consider it to be my duty.

Siva Achariars are venerated persons leading an exemplary life learned in Sanskrit and Tamil the Vedas Saiva Agamas, Paththathis, Pathinen puranas, Panniru Thirumurai Saiva Siddhantam, Sitpa Shastra, Temple Architecture and Astrology. They should have in addition to donning Poonul (பூனூல்), receive all Deekais-Samaya Deekai, Viseda Deekai and Nirvana Deekai and married before they receive Acharya Abidekam from a competent Sivachariar he should daily perform Anmartha Poosai. (ஆன்மார்த்த பூசை) He should not pay obeisance to any one except to the Deity he serves - he should have a tuft of hair (குடுமி) kudumi. Only a Sivachariar could enter the Sanctum Santorium. A Sivachariar could officiate only in the following Temples:-

1. Sivan Temple with a joint Temple to the Sakthi-Ambal
2. Vinayagar Temple
3. Subramaniya Temple

He is enjoined not to officiate on Petite and Village deities. He should not perform Thivasam, Anthietty, funeral rites and he should not run after persons in power.

I am sorry to state that our present Priesthood is in complete disarray and confusion causing great concern among devotees. It has become merely professional without any Spiritual Value.

Most of the persons ordained as Siva Achariars are incompetent - they have no proper knowledge of the Shastras-Vedas Sivagamams etc - they are ignorant of both Tamil and Sanskrit, even those who know some Sanskrit are poor in their intonation (உச்சாடனம்).

The Siva Agamas prescribe five categories of Saiva Priesthood order officiating in Temple Rites, Daily and Special Poojas - நித்திய நைமித்தக பூசைகள்). They are Acharyan, Archakan, Sathakan, Alangirathan and Vasagan (ஆசாரியன், அர்ச்சகன், சாதகன், அலங்கிரதன், வாசகன் என்பவர்களின் வரிசைக்கிரமம்).

Achariyan should perform Naimithia Rites as per Siva Agamas, Archakar shuld perform the Nithiya Poojas, Alangirathan adorns the Deity, Sathagan presents the materials required for the two catergories of Poojas to the respective Priests. Vasaga recited Vedic Manthirams, Othuvars who sings Thirumarais comes under the category of Vasagan.

The Achraya Abideka Ceremonies are not properly done. The weddings and funeral rites too are improperly done. Any Vaideka part of these ceremonies should also be done by Sivachaariars and not by Sumartars who do not receive Siva Deekai.

To make things worse some of the Siva Achariars are self appointed ones. Even the few Sivachariar who are properly ordained and have the competency are flouting the Saiva Agamic tenets and the rules of the Paththathis to suit their convenience; they perform consecration rites to Mariamman and other petty (சிறு) deities. At this rate our temple Rites would be reduced to a farce.

Most of our Temple Trustees including those of our leading temples are indifferent to the present state of affairs. Probably they too are ignorant of the tenets of the Saiva Religion. Only way we could remedy the present situation is by

1. Reviving the Gurukulam Veda Agama Padasalai of Thiruketheeswaram Temple that was suspended owing to the present armed conflict that engulfed the North and East part of Sri Lanka. It had all the facilities to educate and train competent Siva Achariars.

2. To establish a high power disciplinary body consisting of Siva Achriars Trustees and laymen who are learned in Saiva shastras to function like the Christian Pastorate to regulate the teachimg and training of Sivachariar's and to maintain their competency and decorum.

As an interim measure we could send Siva Brahma students to be trained as Siva-Chariyas at the Siva Agama Padasalai run by Dharmapura Adeenam of Tamil Nadu. It is an excellent training centre. The Thiruketheeswaram Temple Restoration Society could make the necessory arrangement. In addition engage Sivachariyas from Tamil Nadu to meet the shortage to officiate at our main Temples.

3. Siva Achariyas are poorly paid and should be given living allowance to live without wants leading a decent life with dignity without looking for extra income outside the Temple. At present they are poorly paid. In this respect we should emulate Christion Missionaries.

Saiva Funeral rites of Non-Brahmins are performed - by Saiva Kurukkal. He should have all the credentials attributed to a Sivachariar, He should be learned in the Vedas, Agamas Siddhanta Shastrars etc. like a Sivachariar and should be trained similarly; he is selected from traditionally vegetarian families. Saiva Kurukkal cannot officiate in temples since he officiates at Funerals. The rites are conducted both in Sanskrit and Tamil. Paththathis prescribe the rites and the Mantram. Saiva Kurukal should enjoy the same status of a Sivachariar.

An Othuvar too should enjoy the same status as a Sivachariar and Saiva Kurukal provided he leads an exemplary life receiving Nirvana deekai with a Deeksha Namam and performing Anmartha Poosai. There are some Othuvars who degrade their position.

Rajarajah II the great Chola King who built the magnificent Dharasuram Temple near Kumbakonam had beatified and honoured one hundred of the Othuvars who served the various temples in his kingdom, gave them Deeksha Namams and established their images in stone at the said Dharasuram Temple. He gave same status to Thirumurai along with the Mantiram.

Saiva Siddhantha Philosophy is purely a Tamilian concept of Yore. It is highly rational and scientific keeping pace with modern science. It is our rich spiritual heritage unique and profound without an equal.

Our greatest Samaya Kuravar (சமய குரவர்) Thirugnana Sambanthar prided himself by calling himself "தமிழ் ஞான சம்பந்தன்" he saw no danger to Tamil by the use of Sanskrit Mantiram in our Temple rites and otherwise; He stood for the due performance of our Temple Rites as per the Siva Agamas. 'Kiriyai' one of the path to Moksha is exhalted by him in his hymns. In it, the use of Sanskrit Mantiram is imperative.

Thirugnana Sambanthar in the 7th Century AD saved Saiva Religion Tamil and it's culture from the Ariyan cult of Jainism and its culture.

Thirugnanasambanthar's Avathar was pre-destined; He gained absolute knowledge (சிவஞானம்) at the age of three (3). Thirugnanasambanthar in his previous birth had reached the state of no more births; however he was in his own words inveigled by Sivaperuman to be born again. This was pre-destined to save Saiva Religion and Tamil and it's culture. The following hymn

"திருத்துருத்தி பதிகம்" demonstrates it.
"துறக்குமா சொல படாய் துருத்தியாய் திருந்தடி
டிறக்குமாறிலாத என்னை மையல் செய்திம் மண்ணின் மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிபடும் உடம்பு விட்
டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே"

Saint Sekilar in the great biographical epic of our Saints has confirmed this.

Finally it is apt to recite here the folowing Hymn.

"சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய் மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறு நெறி சேராமே.
வில்லாண்ட கனகத்திரண் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே".

I had the good fortune of learning under Sri La Sri Sivapadasundaram B. A. from 1924 to 1932 until I

passed the London Matriculation Examination. I was boarded with him at the college premises. In fact I was initiated into the study of Saiva Siddhatam by him; He had regular classes of Thiruvarudpayan at the college.

Sri La Sri Sivapadasundranar considered that all living beings from a tiny ant to an elephant, common with human beings, were all the handi work of Sivaperuman and saw HIS imprint as Athmanathan in them. His compassion for them were boundless. He would not kill or permit to be killed any of them, a bloodsucking bed bug or a poisnous centipede or a venomous snake was not an exception. He gets up in the middle of the night and tenderly picks up the bugs one by one with his deft fingers and threw them out of the window. On many an occasion I have joined him in this midnight exercise of compassion. Once his cook killed a poisonous centipede. He was horrified and was in misery. However he would not desist from punishing a recalcitrant pupil.

From his salary he helped financially old folks who lived in the proximity of Victoria college and in dire circumstances. He was also known to help financially some of his relations in their education. Personally he was sparing and frugal and lead a simple life austere in many ways.

At Kandavanam I was his neighbour. Sri La Sri Sivapadasundaranar had retired and taken permanent residence there. I was then a Proctor and N. P. practising at Colobmo. For the vacations I went to Kandavanam and had the opportunity to meet him often. He was horrified by the Non Brahmin Movement of Tamilnadu and it's influence in the North and East of Sri Lanka devaluing the Vedas and Saiva Agamas among the younger generation of Shaivites.

Sri La Sri Shivapadasunaranar B. A. 's greatest contribution to Shivaisim was his service to the ancient Thiruketheeswaram Temple. He was responsible for the founding of the Thiruketheeswaram Temple restoration Society in the year 1948 and he was it's first President. Ill health prevented him from being an active participant in the day to day affairs of the Society; the Late Thiru K. Kanagaratnam Chairman of Committees deputised. He achieved what Sri La Sri Arumuga Navalar could not do.

In the year 1952 Sri La Sri Shivapadasundaranar B.A. resigned from the Society owing to the difference of views he had with the Secretary of the Society on the question of establishing the Navagraha images for worship at the Thiruketheeswaram Temple. He rightly contended that Navagrahams should not be established in Saiva temples of all in Sivan Temple. Navagrahams are petty Deities like Thikku Palagar to be appeased and not worshipped with appropriate ceremonies precribed - Navagraha Shanti and Navashanti.

Raja Raja Cholan I, whose mentor was Saint Karur Thevar did not establish Navagrahams in the great Temple of Tanjore he built. Navagraha establishment in Saiva Temple is an innovation that came into existence during the period under the influence of the Vaidigas.

Glories of Shaivaism was the last book written by Sri La Sri Shivapadasundaram. B. A. It was done in the year 1952.

In all his writtings Sri La Sri Shivapadasundaram B. A. meticulously followed the footsteps of Sri La Sri Arumuga Navalar.

Before he died he had arranged for the publication of 'Glories of Shaivaism' and first edition was published by the Saivaprakasa Press Jaffna in the year 1955. The second edition of this book has been reprinted by the All Ceylon Hindu Congress & has already been released. I had the privilege of writing a foreword to it in very humble way.

**SIVA SIVA**

## உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

நூல்களைப் படிக்காமல் ஒரு நாளைக்கூட வீணாக்க வேண்டாம். எவர்மீதுங் குற்றங்களைக் கூற வேண்டாம். பெற்ற தாயை ஒரு நாளும் மறந்து விட வேண்டாம். வஞ்சகர்களோடு நட்புக் கொள்ள வேண்டாம். போகத் தகாத இடத்திற்குப் போகவேண்டாம். ஒருவர் நம்மிடமிருந்து நீங்கி அப்பாற் சென்ற பிறகு அவர்களைப் பழிந்துரைக்க வேண்டாம். மனமே! தோளாற்றல் மிக்க குறவர்களுடைய பெண்ணாகிய வள்ளிநாயகியைப் பக்கத்திலே கொண்ட முருகப் பெருமானை வாழ்த்துவாயாக.

oooooooooo

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

நற்குணம் உடைய நல்லவர்களைப் பார்ப்பதும் நல்லதே. நல்லவர்களுடைய நலம் மிகுந்த சொற்களைக் கேட்பதுவும் நல்லதே; நல்லவர்களுடைய குணங்களைச் சொல்வதும் நல்லதே; அந்நல்லவர்களுடன் சேர்ந்திருப்பதுவும் நல்லதே. - *ஔவையார்*

சிறுவர் பகுதி

# சிவபெருமான் மண் சுமந்தமை

மதுரையிலிருந்து அரசாண்ட அரிமர்த்தன பாண்டிய மன்னன் தன் மந்திரியாகிய மாணிக்கவாசகரை அதிகம் தண்டித்து விட்டான். அப் பெரியாரோ சிவமே தமக்குத் துணை எனப் பொறுமையோடு தண்டனையை அனுபவித்தார்.

குழந்தை வருந்துவதைக் கண்டு தந்தை பொறுத்திருக்க மாட்டார் அன்றோ ! சிவ பெருமான் தன் அன்பருடைய வருத்தத்தை நீக்கத் திருவுளங் கொண்டார். வைகை ஆற்றைப் பெருக்கெடுக்கச் செய்தார்.

சாந்தமான வைகை மூர்க்கமாகப் பெருகத் தொடங்கியது. அது எல்லை கடந்து பரவியது. கரைகளை உடைத்து மக்களை நடு நடுங்கச் செய்தது. பாண்டியன் அளவு கடந்து அவரை வருத்திய தன் தவறை உணர்ந்து மாணிக்கவாசரிடம் மன்னிப்புக் கேட்டான்.

மன்னன், ஆறு கரையை உடைக்காமல் தடைசெய்து கட்டுவிக்கும் வேலையை முன்னின்று நடத்துமாறு மாணிக்கவாசகரை வேண்டினான்.

அரச கட்டளைப்படி ஊரவர் எல்லோரும் தமக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைத்தனர்.

ஒரேயொரு பங்கு மாத்திரம் அடைக்கப்படவில்லை. சோமசுந்தரப் பெருமானை நம்பிப் பிட்டு விற்று வாழும் வந்தி என்னும் ஏழைக்கிழவி மதுரையிலே வசித்தாள். அவளுக்கு வேலையாள் கிடைக்கவில்லை.

வந்தி பெருமான் கோயில் வாயிலில் வந்து நின்று, "சுவாமி, யானோ உற்றார் உறவினர் அற்ற ஏழை. எனக்குக் கூலி வேலை செய்ய வருபவர் யாரும் இல்லை. அரசன் தண்டிக்கப் போகின்றானே. சோமசுந்தரப் பெருமானே ! பேய் போன்ற இந்த ஏழையை நீயே கண்ணெடுத்துப் பார்" என்று இரங்கி அழுதாள்.

பெருமான் அவளிடம் இரக்கம் கொண்டார். அவர், அழுக்குப் படிந்த கந்தையுடுத்து, அழகான மேனியையும் அழுக்குப் படிந்தது போல ஆக்கினார். தலையிலே கூடையும், தோளிலே மண்வெட்டியும் கொண்டு வீதி வழியிலே தம்மை வேலை கொள்வார் உளரோ என உரத்த குரலில் கேட்டார்.

அந்தக் குரல் வந்திக் கிழவியின் காதில் கேட்டது. மகிழ்ச்சியடைந்து அந்தக் கூலியாளைக் கூப்பிட்டாள். அவருக்கு உண்ணப் பிட்டும் கொடுத்துக் கரையை அடைக்கும் வேலைக்கு அனுப்பினாள்.

அந்தக் கூலியாள் ஒருகூடை மண்ணைக் கரையிலே கொட்டுவார். களைத்தவர் போலக் கொன்றை மர நிழலிலே கண் வளர்வார். கந்தைத் துணியிலே தாம் கட்டிவந்த பிட்டை அருந்துவார். ஆனால் தனக்கிடப்பட்ட வேலையை மாத்திரம் செய்யவில்லை.

வந்தித் தாயும் கூலியாளை வேலைசெய்ய ஏவியும் பயனில்லை. வருத்தத்தோடு வீடு திரும்பினாள்.

வேலையை மேற்பார்வை செய்பவர்கள் கூலியாளின் விளையாட்டைப் பார்த்தனர். ஒரு ஏவலாளன் கைச் சவுக்கால் கூலியாளுக்கு வலப்பக்கத்தில் அடித்தான்.

அந்த அடி எல்லா ஆன்மாக்களின் உடம்பிலும் உறைத்தது; உலகம் திடுக்கிட்டது.

கூலியாள் மதுரைச் சொக்கநாதரே என அறிந்து யாவரும் மண் சுமந்த பெருமானையும், அவரை மண் சுமக்கச் செய்த வந்தி அம்மையையும் துதித்தனர். மாணிக்க வாசகரை வணங்கினர்.

*"இன்றெமை உய்யக் கொள்வாய் போற்றி"*

நன்றி : சைவபோதினி III (விவேகானந்த சபை வெளியிடு)

---

சாகாத ஓர் சக்தி உலகை ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறது. அதுதான் உலகை சிருஷ்டிப்பது; அழிப்பது; மறுபடியும் தோற்றுவிப்பது; அந்தச் சக்திதான் பரமாத்மா. வேறொன்றும் அதற்கிணையாக இல்லையாதலால் எனது புலன்களை அந்த சக்தியிடம் சமர்ப்பணம் செய்கின்றேன்.

❖❖❖❖❖❖❖❖

தீமையைப் புகுத்தியவர் அவரேயாயினும் அவரைத் தீமை அணுகாது. தீமையை எதிர்த்துப் போர் புரியாவிட்டால் கடவுளை நான் அறியவே முடியாது. என்னுடைய குறைந்த அனுபவத்தினின்றே இதை நான் திண்ணமாகக் கூறுவேன். நான் சுத்தமாகப் பாடுபடப்பட அவருடைய அருகில் செல்கின்றேன். என்றைய தினம் எனது நம்பிக்கை ஹிமாலயத்தைப் போன்று அசையாமலும், பனிச் சிகரங்களைப் போன்று சுத்தமாகவும் ஆகின்றதோ அன்று ஆண்டவனை முற்றிலும் உணர்வே னென்பதும் நிச்சயம்.

❖❖❖❖❖❖❖❖

அஹிம்சையைக் கடைப் பிடிக்காதவனும், சத்திய நெறியில் செல்லாதவனும், பிரும்மசரியத்தை அனுஷ்டிக்காதவனும், மண், பெண், பொன் ஆசைகளை விட்டொழிக்காதவனும் ஒருகாலத்திலும் ஞானியாக மாட்டான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்த உண்மையை நான் முற்றிலும் ஒப்புக் கொள்கின்றவன்.

*- மகாத்மா காந்தி*

# அகில இலங்கை இந்து மாமன்றம்

## நிறைவேற்றுக் குழு உறுப்பினர் பட்டியல் 1998-99.

தலைவர் : திரு. வி. கயிலாசபிள்ளை.
(நிதிக்குழுத் தலைவர்)

பிரதித் தலைவர் : திரு. மா. தவயோகராஜா.
(கட்டிடக்குழுத் தலைவர்)

துணைத் தலைவர்கள் :
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.
திரு. சின்னத்துரை தனபாலா. (சமூகநலன் குழுத் தலைவர்)
திரு. ச. சரவணமுத்து.
திரு. ஏ. கருப்பண்ணாபிள்ளை.
திரு. எஸ். பி. சாமி.
திரு. ந. மன்மதராஜன்.
திரு. இ. கந்தசாமி.
திரு. த. கணநாதலிங்கம். (சமய விவகாரக் குழுத் தலைவர்)
திரு. இரா. மயில்வாகனம்.

குழுத்தலைவர்கள் :
- கல்வி : திரு. க. அருணாசலம்.
- நூலகம் : திரு. இ. நமசிவாயம்.
- வெளியீடுகள் : திரு. இ. சிவகுருநாதன்.

பொதுச்செயலாளர் : திரு. கந்தையா நீலகண்டன்.
(வெளியீடுகள் குழுச் செயலாளர்)

பிரதிச் செயலாளர் : திரு. க. இராஜபுவனீஸ்வரன்.
(உறுப்பாண்மைக் குழுத் தலைவர்)

துணைச்செயலாளர்கள் : திரு. த. மனோகரன்
(கல்விக் குழுச் செயலாளர்)
திரு. க. பாலசுப்பிரமணியம்.

பொருளாளர் : திரு. மு. கந்தசாமி.
(கட்டிடக் குழுச் செயலாளர்)

துணைப்பொருளாளர் : திரு. மு. சொக்கலிங்கம்.

குழுச்செயலாளர்கள் :
- சமயவிவகாரங்கள் : திரு. க. இ. ஆறுமுகம்
- நிதி : திரு. வி. கந்தசாமி
- சமூகநலன் : திருமதி. வானதி ரவீந்திரன்
- உறுப்பாண்மை : திரு. P. கருப்பையா.
- நூலகம் : திரு. பொ. விமலேந்திரன்.

## புதிய அங்கத்துவம்

இந்துமத நிறுவனங்களினதும் அறக் கட்டளைகளினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பின்வரும் இந்துமத நிறுவனங்கள் புதிய அங்கத்துவம் பெற்று இணைந்திருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- ஸ்ரீமுத்துமாரி அம்மன் பரிபாலன சபை, கலேவெல.
- ஸ்ரீசண்முகநாதசுவாமி கோவில் இந்து மாமன்றம், மஸ்கெலியா.
- அன்னை ஆதிபராசக்தி இல்லம், கொழும்பு–15.
- இந்து இளைஞர் மன்றம், கூழாவடி, மட்டக்களப்பு.
- சிவயோகசுவாமிகள் நம்பிக்கை நிதியம், கொழும்பு–6.
- இந்து இளைஞர் மன்றம், உடுவில், சுன்னாகம்.

## நாவலர் குருபூசை

இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை, கடந்த டிசெம்பர் மாதம் 09 ம் திகதியன்று இரத்மலானையிலுள்ள கொழும்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சைவப் பெரியார் திரு. க. உமா மகேசுவரம்பிள்ளை சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

அன்றைய தினம் மாமன்றத் தலைமையகத்திலுள்ள பிரார்த்தனை மண்டபத்திலும் நாவலர் உருவச் சிலைக்கு விசேட பூசை வைபவம் நடைபெற்றது.

## நூலகத் திறப்பு வைபவம்

மாமன்றத் தலைமையகத்தில் கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதியன்று மாமன்றம் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களால் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய வைபவத்தின்போது, மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" சஞ்சிகையும், சைவப் பெரியார் ச. சிவபாத சுந்தரனார் அவர்களால் எழுதப்பட்ட Glories of Shaivaism என்ற நூலின் மறுபதிப்பும் மாமன்றத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் இலங்கையில் வழங்கவிருக்கும் இன்னிசை விருந்து

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் பராமரிக்கப்பட்டு வரும்
கொழும்பு - இரத்மலானை இந்துக் கல்லூரியின் மாணவர் இலவச விடுதி
வளர்ச்சிக்காக நடைபெறவிருக்கும் நன்கொடை நிதிய இன்னிசை நிகழ்ச்சி



பிரபல பழம்பெரும் பாடகியான கானசரஸ்வதி டி. கே. பட்டம்மாள், பிரபல மிருதங்க வித்துவான் பாலக்காடு மணி ஆகியோரின் பேத்தியும், மிருதங்க வித்துவான் இ. சிவகுமார் அவர்களின் புதல்வியும் பிரபல தென்னிந்திய இசைக் கலைஞருமான "இன்னிசை மாமணி" "யுவகலா பாரதி" ஸ்ரீமதி நித்யஸ்ரீ மகாவேதன் வழங்கும் மேற்படி இன்னிசை விருந்து எதிர்வரும் ஏப்ரல் 10ம், 11ம் திகதிகளில் மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இசை உலகிற்கு கர்நாடக இசை மூலம் அறிமுகமாகி, திரைப்படப் பாடல்கள் மூலமும் ரசிகர்களது இதயங்களைக் கவர்ந்திருக்கும் ஸ்ரீமதி நித்யஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகளின் 60வது பிறந்த தினத்தின் போது விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். சென்னை மியூசிக் அக்கடமி, தமிழ் இசைச் சங்கம் நடத்திய இசைப் போட்டிகளிலும், அகில இந்திய வானொலி தேசிய ரீதியாக நடத்திய போட்டிகளிலும் பரிசில்கள் பெற்றிருப்பதுடன், 1990ம் ஆண்டு பாபநாசம் சிவன் தம்புரா பரிசும், 1994ம் ஆண்டு சிறந்த பல்லவி இசைக்கான விருதும் உட்பட மேலும் பல விருதுகளையும் பெற்றுள்ளார். கண்ணதாசன் விருது, கலைஞர் விருது, தேசிய ஒருமைப்பாடு மையம் விருது என்பன இவருக்கு சென்ற ஆண்டு வழங்கப் பெற்றவைகளாகும்.

இவர் 1996ம் ஆண்டு இந்தோ – அமெரிக்க கலாசார சமய நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் நடைபெற்ற 32 இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார்.

ஸ்ரீமதி நித்யஸ்ரீ மகாதேவன் சென்னை பல்கலைக்கழக வர்த்தகவியல் பட்டதாரியாவார். பேத்தியார் டி. கே. பட்டம்மாள், தாயார் ஸ்ரீமதி லலிதா சிவகுமார் ஆகியோரை குருவாகக் கொண்டவர்.

## ஸ்ரீமதி நித்யஸ்ரீ வழங்கிய இன்னிசை விருந்து தொடர்பான விமர்சனங்களுள் ஒரு சில:

"லண்டனில் இசை மழையில் நனைய வைத்து வர்ண ஜாலம் புரிந்த நித்யஸ்ரீ" (லண்டன் **Orphan Trust** நன்கொடை நிதிக்கான இசை நிகழ்ச்சி பற்றிய விமர்சனம் - புதினம் - நவம்பர் 1998)

"சுத்த சுருதியுடன் தனித்துவமான முறையில் ராகங்களைக் கையாண்டு புதிய இசை வார்ப்புகளை தனது ஆபூர்வ குரல்வளத்தின் மூலம் வெளிப்படுத்தி, ரசிகர்களின் இதயங்களைக் கவரும் வகையில் இசைத்துறையில் சிறந்து விளங்குகிறார்."

**(Kartik Fine Arts Musical Programme - Review by Indian Express - 13-12-98)**

"சொற்தெளிவுடனும், தத்துவரூபமாகவும், பக்தியுடனும் கர்நாடக இசை சமுத்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட முத்துக்களை ஸ்ரீமதி நித்யஸ்ரீ மகாதேவன் வழங்கினார்"

(**Indian Fine Arts - 66**வது தென்னிந்திய இசை மகாநாடு, இசை விழாவில் நிகழ்த்திய இசை நிகழ்ச்சி பற்றிய விமர்சனம் - **The Hindu 25.12.98**)

நிதி மிகுந்தவர் பொற்குவை தந்து, அதுவுமற்றவர் காசுகள் தந்து நன்கொடை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்து, 1999 ஏப்ரல் 10ம், 11ம் திகதிகளில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்படி அகில இலங்கை இந்து மாமன்றம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றது.

## இந்தச் சுடரில்......


1. பஞ்ச புராணங்கள்

2. பொங்கல் பண்டிகை

3. மஹா சிவராத்திரியின் தோற்றமும் சிறப்பும்

5. சீவகாருண்யமும் சிவன் கருணையும்

6. வாய்மொழிக் குறள்

8. இந்து சமய மறுமலர்ச்சியில் சுவாமி விவேகானந்தரின் பங்கு

10. ருத்ராட்ச மகிமை

12. *Maha Sivarathri - the holy night of God Siva*

14 தென்கிழக்கின் திருக்கோயில்

16. செய்திக் குறிப்பு: இரத்மலானை – மொறட்டுவை இந்து மன்றம்

17. *From Kailasa to Kataragama*

22. சிற்சபேசன்

23. இலங்கையின் கல்வி வளர்ச்சியில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் தாக்கம்

25. இந்துப் பெண்களும் சமயமும்

27. விவேகானந்தர் வாழ்க

29. அன்பு வேண்டுகோள்

30. *Saiva Periyar Sivapathasundaranar*

35. சிவபெருமான் மண்சுமந்தமை

36. மாமன்றச் செய்திகள்



**This Issue Sponsored by**

UNION BANK OF COLOMBO LTD.

**The Spirit of Innovative Banking**


**அடுத்த சுடர்**

பிரமாதி வருடம்
சித்திரை – ஆனி

### வாழ்த்து

மாதமும் மாரிபெய்ய வளமெலாம் மலிந்துபொங்க
வேதமு மறமு மோங்க மேதினி மக்களெல்லாம்
மாதொரு பாகனார்தம் அருளினா லறங்க ளோங்கிப்
பேதங்க ளெல்லாம் நீங்கிப் பேரருள் பெற்றுவாழி.


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழ்
தை – பங்குனி
வெகுதானிய வருடம் மாசி 2ம் திகதி
14.02.1999



ஆசிரிய குழு :
திரு. ஆ. குணநாயகம்
திரு. இ. சிவகுருநாதன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. கந்தையா நீலகண்டன்


| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா | ரூபா | 80.00 |
| வெளிநாடு வருடச் சந்தா | டொலர் | 10.00 |


**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A. C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2. இலங்கை.
தொலைபேசி எண்: 434990; பாக்ஸ் எண்: 344720.



இந்துஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

**Thai - Pankuni Issue of**
**ALL CEYLON HINDU CONGRESS**
**14th February 1999.**



**Editorial Board :**
Mr. A. Gunanayagam
Mr. R. Sivagurunathan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. Kandiah Neelakandan


| | | |
|---|---|---|
| Price | Rs. | 20.00 per copy. |
| Annual Subscription | Rs. | 80.00 |
| Foreign Subscription (Including Postage) | U. S. $ | 10.00 |


**ALL CEYLON HINDU CONGRESS,**
**A. C. H.C. BLDG.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 434990; Fax No: 344720.


**Next Issue :**
***SITHIRAI - AANI***


*Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.*



Printed By: Unie Arts (Pvt) Ltd., Colombo - 13.